# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1993 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

---

*[1993, மார்ச் மாதம் 31 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1993, ஏப்பிறல் மாதம் 02 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

**கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.**

**விலை : ரூபா 3.45** **தபாற் செலவு : ரூபா 3.10**

### 1993 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

[1993, மார்ச் மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 51/91
3071

### குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையை திருத்துவதற்கானதொரு சட்டம்.

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால்** பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1993 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். **சுருக்கப் பெயரும், நடைமுறைக்கு வரும் தேதியும்.**

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 338 ஆம் பிரிவு, அதன் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— **101ஆம் அத்தியாயத்தின் 338 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

"(ஆ) "சட்டப் பிரதிநிதி" என்பது மரணசாதன நிறைவேற்றுநர் அல்லது மரணச்சொத்து நிருவாகி அல்லது ஐந்து இலட்சம் ரூபா பெறுமதிக்குக் குறைந்த பெறுமதியுள்ள ஒரு மரணச் சொத்தின் விடயத்தில் மரபுரிமை வழியாக உரிமைபெற்ற ஆகக்கிட்டிய உறவினர் என்று பொருளாகும் :

ஆயின், எவ்வாறாயினும், சட்டப் பிரதிநிதி யார் என்பது பற்றி ஏதேனும் பிணக்கு எழும் பட்சத்தில் 397 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 394 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில் உள்ள "சட்டப் பிரதிநிதி" என்பதன் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— **முதன்மைச் சட்டவாக்கத்தின் 394 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

"சட்டப்பிரதிநிதி" என்பது மரணசாதன நிறைவேற்றுநர் அத்துடன் மரணச் சொத்து நிருவாகியும் அல்லது ஐந்து இலட்சம் ரூபா அல்லது பெறுமதிக்குக் குறைந்த பெறுமதியுள்ள ஒரு மரணச் சொத்தின் விடயத்தில், மரபுரிமை வழியாக உரிமை பெற்ற ஆகக்கிட்டிய உறவினர் என்று பொருளாகும்.

4. குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் XXXVIII ஆம் அத்தியாயம் இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் அத்தியாயம் இடப்படுகின்றது:— **முதன்மைச் சட்டவாக்கத்தின் XXXVIII ஆம் அத்தியாயத்தை மாற்**

## "அத்தியாயம் XXXVIII

### மரணசாதன வழக்குகள்

இறந்தவரின் மரண சாதவத்தை வைப்பிலிடல்.

516. (1) எவரேனும் ஆள் இலங்கையில் ஒரு மரணசாதனத்தை விட்டு இறந்தால், அது எவ்வாளின் பாதுகாப்பில் அல்லது கட்டுக்காப்பில் வைப்பிலிடப்பட்டதோ அந்த ஆள், அல்லது அந்த மரணசாதனகாரர் இறந்தபின் அத்தகைய மரணசாதனத்தைக் கண்டெடுக்கும் ஆள் எவரும், அந்த மரணசாதவத்தை, அந்த வைப்பேற்றவர் அல்லது கண்டெடுப்பவர் எந்த மாவட்டத்துள் வதிகின்றாரோ அந்த மாவட்டத்தின் மாவட்ட நீதிமன்றத்தில், அல்லது அந்த மரணசாதனகாரர் எந்த மாவட்டத்தில் இறந்தாரோ அந்த மாவட்டத்தின் மாவட்ட நீதிமன்றத்தில், மரணசாதனம் கண்டெடுக்கப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளாகக் காண்பித்தல் வேண்டும்; அத்துடன் மரணசாதனகாரர் இறந்த நேரம், இடம் என்பவற்றைச் சரிபார்த்து, (அது உண்மையானது எனின்) அவர் அந்த மாவட்ட நீதிமன்றத்தின் அல்லது வேறேதேனும் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்துள் ஆதனத்தைவிட்டு இறந்திருந்தால் அது எந்த நீதிமன்றம் என்பதனையும் அத்தகைய ஆதனத்தின் தன்மையும் பெறுமதியும் என்ன என்பதையும் அல்லது அத்தகைய மரணசாதனகாரர் ஆதனம் எதனையும் இலங்கையில் விட்டு இறக்கவில்லையென்றால், அது உண்மையெனின் அவர் ஆதனம் எதனையும் இலங்கையில் விட்டு இறக்கவில்லை என்பதையும் கூறுகின்றதான சத்தியத்தைச் செய்தல் வேண்டும், அல்லது உறுதியுரையைக் கூறுதல் வேண்டும், அல்லது (முதலாம் அட்டவணையிலுள்ள 81 ஆம் இலக்கப்படிவத்தில் அமைவதான) சத்தியக் கடுதாசியைக் காண்பித்தல் வேண்டும்.

அவ்விதம் காண்பிக்கப்படும் மரணசாதனம், மரணசாதன அதிகாரப்பத்திர அலுவலரினால் இலக்கமிடப்பட்டு முதலெழுத்தொப்பமிடப்படுதல் வேண்டும் என்பதோடு, மாவட்ட நீதிமன்றத்தின் வழக்குப் பதிவேட்டறையில் வைப்பிலிடப்பட்டு வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

மரணசாதன அதிகாரப் பத்திரத்திற்கான அல்லது மரணச் சொத்து நிருவாகத்தத்துவப் பத்திரத்துக்கான விண்ணப்பம்.

517. (1) எந்த மரணசாதனத்தின்கீழ் அல்லது எம் மரணசாதனத்தின் பயனாக இலங்கையிலுள்ள ஏதேனும் ஆதனம் எவ்வகையிலும் சம்பந்தப்பட்டுள்ளதோ, அம்மரணசாதனத்தினை விட்டு, ஆளெவரும் இறக்கும்போது, அதனகத்து நிறைவேற்றுநராக நியமிக்கப்பட்ட ஆள் எவரும், அவர் எந்த மாவட்ட நீதிமன்றத்தின் மாவட்டத்துக்குள் வதிகின்றாரோ அந்த மாவட்ட நீதிமன்றத்துக்கு அல்லது மரணசாதனகாரர் இறந்த நேரத்தில் மரணசாதனகாரர் வதிந்த மாவட்டத்துக்குரிய மாவட்ட நீதிமன்றத்துக்கு அல்லது மரணசாதனகாரரது மரணச் சொத்தை, சேர்ந்த தான காணியெதுவும் அமைந்துள்ள மாவட்ட நீதிமன்றத்திற்குரிய மாவட்ட நீதிமன்றத்துக்கு 524 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள கால எல்லைக்குள்ளாகவும் அந்த முறையிலும் மரணசாதனம் எண்பிக்கப்படுவதற்காகவும், அம் மரணசாதனத்தின் மீதான அதிகாரப் பத்திரம் தமக்கு வழங்கப்படுவதற்காகவும் விண்ணப்பிக்கலாம்; அத்துடன் மரணசாதனத்தின் பயனாக அல்லது வேறுவகையாக மரணசாதனகாரரின் ஆதனம் நிருவகிக்கப்படுவதில் அக்கறையுள்ள ஆளெவரும், மரணசாதனம் எண்பிக்கப்படுவதற்காகவும், மரணசாதனத்தின் பிரதியொன்றை இணைத்து மரணச்சொத்து நிருவாகத் தத்துவப்பத்திரங்கள் தமக்கு வழங்கப்படுவதற்காகவும், அத்தகைய நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) மரணச்சொத்து நிருவாகத் தத்துவப் பத்திரங்களுக்கு உரித்துடைய எவரேனுமாள் இலங்கைக்கு வெளியேயிருந்தால், விடயத்துக்குத் தேவையாகக்கூடியவாறு, அந்த மரணசாதனம் இணைக்கப்பட்டு அல்லது இணைக்கப்படாமல் மரணச்சொத்து நிருவாகத் தத்துவப் பத்திரங்கள், அத்தகைய ஆளினது முறையாக நியமிக்கப்பட்ட அற்றோனித்தத்துவகாரருக்கு வழங்கப்படலாம்.

மரணசாதனம் இருக்கும் போது மரணசாதன அதிகாரப்பத்திரம் அல்லது மரணச் சொத்து நிருவாகத் தத்துவப்பத்திரம் கட்டாயமானதாதல்.

518. இந்த அத்தியாயம் நடைமுறைக்கு வந்ததன் பின்னர், மரணசாதனமொன்று நீதிமன்றத்தில் வைப்பிலிடப்பட்டும், அத்துடன் அது தொடர்பில் மரணசாதனம் எண்பிக்கப்பட்டு, அது தொடர்பாக மரணசாதன அதிகாரப்பத்திரம் வழங்கப்படுவதற்கு எவரேனும் ஆளினால் விண்ணப்பம் செய்யப்படாத ஒவ்வொரு விடயத்திலும் நீதிமன்றமானது அதற்கென விண்ணப்பம் செய்யப்படுவதன் மீது மரணசாதன அதிகாரப் பத்திரம் அல்லது மரணச்சொத்து நிருவாகத் தத்துவப்பத்திரம் வழங்கப்படுவது தொடர்பாக எடுத்துக்காட்டப்பட்டுள்ள நடவடிக்கை முறைக்கிணங்க, அதற்காக விண்ணப்பிப்பதற்கு கடைசியாக முற்போந்த பிரிவின் ஏற்பாடுகளின் மூலம்

தகுதிவாய்ந்தவரான எவரேனும், ஆளுக்கு அல்லது நீதிமன்றத்தின் அபிப்பிராயப்படி இரத்த உறவு, அக்கறையின் அளவு, மரணச்சொத்தின் பாதுகாப்பு அது முறையாக நிருவகிக்கப்படுமென்ற நம்பிக்கை, ஆகியவை காரணமாக நிருவாகியாக நியமிக்கப்படுவதற்குத் தகுந்தவராகவுள்ள வேறு ஆளொருவருக்கு சந்தர்ப்பம் தேவைப்படுத்தக்கூடியவாறு மரணசாதனம் இணைக்கப்பட்டு அல்லது இணைக்கப்படாமல் அம்மரணசாதனத்தில் அல்லது நிருவாகத் தத்துவப்பத்திரத்தில் பெயர் குறிக்கப்பட்டுள்ள நிறைவேற்றுநருக்கு அல்லது நிறைவேற்றுநர்களுக்கு மரணசாதன அதிகாரப்பத்திரம் வழங்குதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மரணச் சொத்து நிருவாகத் தத்துவப்பத்திரங்கள் நீதிமன்றம் தகுதியானதெனக் கருதுகின்றவாறு, இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் முறையாக மட்டுப்படுத்தப்படலாம் அல்லது மட்டுப்படுத்தப்படாது விடப்படலாம்.

**எப்போது பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் நியமிக்கப் படலாம் என்பது.**

519. கடைசியாக முற்போந்த பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முறையில் நிருவாகியாக நியமனஞ் செய்யப்படுவதற்கு, நீதிமன்றத்தின் அபிப்பிராயப்படி தகுதியானவரும் தகுந்தவருமான ஆள் எவரும் இல்லாதவிடத்து, அல்லது அத்தகைய ஆள் எவரும் அவ்வாறு நியமனஞ் செய்யப்படுவதற்கு விரும்பாதவிடத்து அத்துடன் வேறெந்தச் சந்தர்ப்பத்திலும் அல்ல, நீதிமன்றம் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளரை நிருவாகியாக நியமனஞ் செய்தல் வேண்டும்.

**பிணைப் பொறுப்பு.**

520. மேற்கூறப்பட்ட அத்தகைய நிறைவேற்றுநர் மரணசாதன அதிகாரப் பத்திரத்திற்கு விண்ணப்பஞ் செய்யாத காரணத்தினால் அல்லது செயலாற்றுவதற்குத் தகுதிவாய்ந்தவரும் விருப்பமுள்ளவருமான நிறைவேற்றுநர் எவரும் இலங்கையில் வதியாத காரணத்தினால், அல்லது 517 ஆம் பிரிவின்கீழ் மரணசாதன நிருவாகத் தத்துவப்பத்திரங்களுக்கு விண்ணப்பஞ் செய்யத் தகுதிவாய்ந்தவராயுள்ள ஆள் எவரும் விண்ணப்பம் செய்யாத காரணத்தினால் 518 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட அத்தகைய ஆள் எவராவது, நிருவாகியாக நியமனஞ் செய்யப்படுதல் அவசியம் எனத் தோன்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நீதிமன்றமானது அந்த மரணச்சொத்தை அத்தகைய ஆள் முறையாக நிருவகிப்பதற்கான பிணைப்பொறுப்பை அத்தகைய ஆளிடமிருந்து பெறுதல் வேண்டுமென்பதுடன், இந்த நோக்கத்துக்காக இரண்டு நல்ல, போதிய பிணைகாரர்களுடன் முதலாம் அட்ட

வணையின் 90 ஆம் இலக்கப் படிவத்தில் இறந்த ஆளின் ஆதனத்தை முறையாக நிருவகிப்பதற்காக முறியொன்றை எழுதி நிறைவேற்றுமாறு அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய பிணைப்பொறுப்பை விட்டுவிடுவதற்கு நீதிமன்றம் எச்சந்தர்ப்பத்திலும் தகுதிவாய்ந்ததாதலாகாது.

பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளரினால் நிருவாகம் செய்யப்படுவதற்கான விண்ணப்பம்.

521. (1) பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் மரணச் சொத்து நிருவாகத் தத்துவப் பத்திரங்களுக்காக விண்ணப்பிக்கும் போதெல்லாம், அத்தகைய பத்திரங்களை வழங்குவதற்காக முன்வைக்கப்பட்ட மனு பின்வருவனவற்றைக் குறிப்பிட்டால் போதுமானதாகும் :—

(அ) மனுதாரரின் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய மட்டில் இறந்தவர் இறந்த நேரமும் இடமும் ;

(ஆ) தெரிந்திருப்பின், இறந்தவரின் மரபுரிமையாளர்களின் பெயர்களும் முகவரிகளும் ;

(இ) அவர் அதனை நிச்சயித்திருக்கக்கூடிய அளவுக்கு, இறந்தவரினால் விடப்பட்ட ஆதனத்தின் முழுமையானவையும் உண்மையானவையுமான விபரங்கள் ;

(ஈ) தெரிந்திருப்பின், மரணச் சொத்தின் பொறுப்புக்கள் பற்றிய விபரங்கள்.

(2) பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர், நீதிமன்றம் வேறுவகையாகப் பணித்தாலன்றி, இறந்தவரின் ஆதனம்பற்றிய கணக்குகளைக் கோப்பிடும்படி தேவைப்படுத்தப்படுதலாகாது.

மரணச் சொத்துக்களை நிருவகித்தல் தொடர்பாக, பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளருக்குள்ள கடமைகள்.

522. மரணசாதனமொன்று தொடர்பில் மரணசாதன அதிகாரப்பத்திரத்தை அல்லது இறந்த ஆளொருவரது மரணச்சொத்து தொடர்பில் மரணச்சொத்து நிருவாகத் தத்துவப்பத்திரங்களின் வழங்கலைப் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் பெற்றுள்ள போதெல்லாம், அவர் சாத்தியமானவரையில், மரணச் சொத்துக்களை நிருவகித்தல் தொடர்பான இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கியொழுகுதல் வேண்டும்:

ஆயின், பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர், பின்வருவனவற்றைச் செய்வதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது; அதாவது —

(அ) நிறைவேற்றுநராக அல்லது நிருவாகியாகச் சத்தியத்தைச் செய்து கொள்வதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது ;

(ஆ) ஏதேனும் முறியை அல்லது பிணைப்பொறுப்பைக் கொடுத்துதவுவதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது ; ஆனால் அத்தகைய முறியை

அல்லது பிணைப்பொறுப்பைக் கொடுத்திருந்தாரென்றுற்போன்று, அவர் அதே பொறுப்பிற்கும் கொடுமதிகளுக்கும் அமைந்தவராதல் வேண்டும் ;

(இ) ஏதேனும் ஆவணத்தைத் தயாரிக்கும்போது அல்லது தயாரிக்கையில் அத்தகைய ஆவணத்தில் முத்திரைகள் ஒட்டுவதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது ; ஆனால் அவர் 1982ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய கொடுப்பனவைக் காலக்கிரமத்தில் செலுத்துதல் வேண்டும் ;

(ஈ) நீதிமன்றம் வேறுவகையாகப் பணித்தாலொழிய இறுதிக் கணக்குகளைச் சமர்ப்பிப்பதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது.

எவருக்கு வழங்கப்படுதல் வேண்டும் என்பது.

523. மரணசாதனத்தை எண்பித்துக்கொள்வதற்கும் மரணசாதன அதிகாரப் பத்திரத்தை அல்லது மரணச்சொத்து நிருவாகத் தத்துவப்பத்திரத்தின் வழங்கலைப் பெற்றுக்கொள்வதற்குமெனச் செய்யப்படும் உரிமைக் கோரிக்கைகளுள் முரண்பாடு ஏற்படும் சந்தர்ப்பத்தில் ஒரு நிறைவேற்றுநரினது அல்லது அவருடைய அற்றோணித் தத்துவக்காரரினது உரிமைக் கோரிக்கை மற்றெல்லோருடைய உரிமைக்கோரிக்கைகளிலும் பார்க்க முந்துரிமை பெறுதல் வேண்டும்; அத்துடன், கடன் கொடுத்த ஒருவரினது உரிமைக்கோரிக்கை அந்த மரணசாதன வழி எஞ்சிய பொருள் பெறுநரினது அல்லது மரணசாதனவழி நன்கொடை பெறுநரினது உரிமைக்கோரிக்கைக்குப் பின்போடப்படுதல் வேண்டும். மரணசாதனமிலா வழியுரிமை விடயத்தில் மரணச்சொத்து நிருவாகத் தத்துவப் பத்திரத்தின் வழங்கலைப் பெறுவதற்கான உரிமைக்கோரிக்கைகளுள் அதே போன்ற முரண்பாடு ஏற்படும் சந்தர்ப்பத்தில் கைம்பெண்ணினது அல்லது தாரமிழந்தவரினது உரிமைக்கோரிக்கை மற்றெல்லோரினது உரிமைக்கோரிக்கைகளிலும் பார்க்க முந்துரிமை பெறுவதாதலாலும், ஒரு மரபுரிமையாளரின் உரிமைக்கோரிக்கை கடன் கொடுத்த ஒருவரது உரிமைக்கோரிக்கையிலும் பார்க்க முந்துரிமை பெறுவதாதலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறுயினும், நீதிமன்றமானது கைம்பெண்ணின் அல்லது தாரமிழந்தவரின் உரிமைக்கோரிக்கையை நல்ல காரணத்துக்காகப் பின் தள்ளி வைக்கலாம்.

மரணசாதன அதிகாரப் பத்திரத் துக்கு விண் ணப்பம் செய்யப்படும் விதமும் மரணசாதனம் எண்பிக்கப்படும் விதமும்.

524. (1) இறந்துபோன ஆளொருவரது மரண சாதனத்தை எண்பித்துக்கொள்வதற்காக மாவட்ட நீதிமன்றத்திற்குச் செய்யுப்படும் விண்ணப்பம் ஒவ்வொன்றும், மரணசாதனமொன்று கண்டெடுக்கப் பட்ட தேதியிலிருந்து மூன்றுமாத காலப்பகுதியொன் றுக்குள்ளாகச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அது ஒரு மனுவாயிலாகவும் சத்தியக்கடதாசி மூலமாக வும் செய்யப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்த கைய மனு பின்வருவனவற்றை இலக்கமிடப்பட்ட பந்திகளில் எடுத்துக்காட்டுதல் வேண்டும் :—

(அ) மரணசாதனம் எழுதப்பட்டமை பற்றிய நிகழ்வு;

(ஆ) இறந்துபோனவரின் ஆதனம் பற்றிய விபரங் களும் அதன் அமைவிடமும்;

(இ) எந்த ஏதுக்களின் அடிப்படையில் மனுதாரர் மரணசாதனத்தை எண்பித்துக்கொள்வதற்கு உரித்துடையவராகவுள்ளார்; அத்துடன்

(ஈ) மனுதாரர் எத்தன்மையில் உரிமைக்கோரிக்கை செய்கிறார்; (அதாவது கடன் கொடுத்தவர் என்னும் தன்மையிலா, நிறைவேறுநர் என் னும் தன்மையிலா, நிருவாகி என்னும் தன் மையிலா, மரணசாதனவழி எஞ்சியபொருள் பெறுநர் என்னும் தன்மையிலா, பொருள் பெறுநர் என்னும் தன்மையிலா, மரபுரிமை யாளர் என்னும் தன்மையிலா, அல்லது மரண சாதனவழி நன்கொடை பெறுநர் என்னும் தன்மையிலா என்பது)

(2) அந்த விண்ணப்பம் எந்த மாவட்ட நீதிமன்றத் தில் செய்யப்படுகிறதோ அந்த மாவட்ட நீதிமன்றத் தில் அந்த மரணசாதனம் ஏற்கனவே வைப்பிலிடப் பட்டிராவிட்டால், அது ஒன்றில் விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும், அல்லது அந்த விண்ணப் பஞ் செய்யப்படும் நேரத்தில், அது நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டு, அந்த மரணசாதனம் அதற்குச் சான்றுக்காட்டாகவமைந்த ஒரு சத்தியக்கடுதாசியின் மூலம் அல்லது வாய்மொழிச்சான்றின்மூலம் அதுவே பது என அடையாளங் காணப்படுதல் வேண்டும்.

(3) வேறொரு மாவட்ட நீதிமன்றத்தில் வைப்பிலி டப்பட்டிருக்கின்றதான இறந்த ஆள் ஒருவரினது மரணசாதனத்தை எண்பித்துக் கொள்ளுவதற்காக ஒரு மாவட்ட நீதிமன்றத்திற்கு இப்பிரிவின் கீழ் ஒரு விண்ணப்பத்தைச் செய்யும் அல்லது செய்ய முன்னும் ஆள் ஒவ்வொருவரும், அத்தகைய விண்ணப்பத்தின்

நோக்கத்துக்காக முதலாவதாகச் சொல்லப்பட்ட அந்த நீதிமன்றத்தைக் கொண்டு, சொல்லப்பட்ட மரணசாதனத்தை, அந்த விண்ணப்பம் எந்த நீதிமன்றத்தில் செய்யப்படவிருக்கின்றதோ அந்த நீதிமன்றத்துக்கு, அனுப்பிவைக்கச் செய்வதற்கு உரித்துடையவராவார்; அத்துடன், அம்மரணசாதனம் சட்டத்துக்கிணங்க முறையாக எழுதி நிறைவேற்றப்பட்டது என்பதை எண்பிப்பதும் மனுதாரரின் உரிமைக்கோரிக்கைக் கிணங்க, அவரது தன்மை நிலையை நிறுவுவதுமான, ஒன்றில் நிகழ்வுகள் பற்றிய சத்தியக் கடுதாசி உருவில் அல்லது வாய்மொழிச் சாட்சியத்தின் உருவிலான போதிய சான்றினால் அத்தகைய விண்ணப்பம் ஆதாரப்படுத்தப்பட்டிருத்தலும் வேண்டும்.

(4) மனுதாரர் மனுவுடன் பின்வருவனவற்றைச் சேர்த்தனுப்புதல் வேண்டும் :—

(அ) 529 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலை வெளியிடுவதற்கான செலவை மேவுவதற்கான கட்டணக் கொடுப்பனவு பற்றிய எண்பிப்பு; அத்துடன்

(ஆ) அவரது விண்ணப்பத்திற்குச் சம்மதிக்கின்ற அத்தகைய எதிர்வாதிகளின் எழுத்திலான சம்மதம்.

(5) மனுதாருடைய விண்ணப்பம் ஆள் எவராலும் எதிர்க்கப்படுமென எண்ணுவதற்கு அவருக்கு எவ்வித காரணமுமில்லாவிட்டால், அவர் அந்தப் பொருள்பட்ட ஒரு சத்தியக் கடதாசியைத் தமது மனுவுடன் கோப்பிட்டு, அவரது மனுவில் ஆள் எவரையாவது எதிர்வாதியாகப் பெயர் குறிக்காதுவிடலாம்.

ஐந்துலட்சம் ரூபாவை விஞ்சுகின்ற பெறுமதியான ஆதனத்தை விட்டு ஆள் இறக்குமிடத்து அறிக்கையிடுவதற்கான கடமை.

525. மரணசாதனமொன்றை விட்டுவைக்காது எவரேனும் ஆள் இலங்கையில் இறக்கும்போது, அவர் ஐந்து லட்சம் ரூபா பெறுமதிக்கு அல்லது அதனை விஞ்சுகின்ற பெறுமதிக்கு இலங்கையில் ஆதனத்தை விட்டு இறந்திருந்தால், அத்தகைய ஆளின் கைம்பெண், தாரமிழந்தவர் அல்லது ஆகக் கிட்டிய உறவினர் அவர் இறந்த தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள்ளாக அவர் அவ்வாறு இறந்த மாவட்டத்தின் மாவட்ட நீதிமன்றத்திற்கு அத்தகைய மரணம்பற்றி அறிக்கையிடுவதும் அதேவேளை அத்தகைய இறப்பின் நேரத்தையும் இடத்தையும் சுட்டிக்காட்டுவதோடு மரணசாதனமெழுதாது இறந்தவர் அந்த அல்லது வேறேதேனும் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்துக்குள்ளாக ஆதனத்தைவிட்டு இறந்தது உண்மையாயின் அவ்வாறு விட்டு இறந்துள்ளார் எனவும் அவ்வாறாயின் எந்த நீதிமன்றத்தில் என

பன பற்றியும் கூறுவதுமான சத்தியபத்திரமொன்றை அல்லது உறுதியுரையொன்றைச் செய்வதும் அல்லது சத்தியக் கடதாசியொன்றைக் காண்பிப்பதும் அவரது கடமையாதல் வேண்டும்.

திருவாகத் தத்துவப் பத்திரத்திற்கு எவர் விண்ணப்பிக்கலாம் என்பது.

526. மரணசாதனமொன்று எழுதாது எவரேனும் ஆள் இறக்கின்றபோது அல்லது மரணசாதனம் கண்டு பிடிக்கப்பட முடியாமலும் அத்தகைய ஆள் இலங்கையில் ஆதனத்தைவிட்டும் இறக்கின்றவிடத்து—

(அ) இறந்தவரின் மரணச் சொத்தை நிருவகிக்க வேண்டும் என அக்கறை கொண்டுள்ள ஆளெவரும் நிருவாகத் தத்துவப்பத்திரங்கள் தமக்கு வழங்கப்படவேண்டுமென விண்ணப்பிக்கலாம் ; அல்லது

(ஆ) இறந்தவரின் எவரேனும் மரபுரிமையாளர், இறந்தவரின் மரணச் சொத்துக்கு வழியுரிமையாளராக வர உரித்துடைய மரபுரிமையாண்மைச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டுமென விண்ணப்பிக்கலாம்.

அத்தகைய விண்ணப்பம் விண்ணப்பக்காரர் வதிகின்ற அல்லது இறந்தவர் மரணமெய்திய நேரத்தில் வசித்த அல்லது இறந்தவரின் மரணச் சொத்தைச் சார்ந்த ஏதேனும் காணி அமைந்திருக்கின்ற மாவட்டத்தில் உள்ள மாவட்ட நீதிமன்றத்திற்கு 528 ஆம் பிரிவுக்கிணங்கச் செய்யப்படுதல் வேண்டும்.

மரணச் சொத்தின் பெறுமதி ஐந்து லட்சம் ரூபாவை விஞ்சுமிடத்து திருவாகம் செய்ய வேண்டியது கட்டாயமானதாகும்.

527. ஆளெவரும் விடயத்துக்கேற்ப நிருவாகத் தத்துவப் பத்திரங்கள் அல்லது மரபுரிமையாண்மைச் சான்றிதழ்கள் வழங்கப்படுவதற்கு விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்திலும், அம்மரணச் சொத்தை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை நிருவகிப்பதற்காக எவரேனும் ஆளை நியமிப்பது அவசியமானது அல்லது வசதியானதென் நீதிமன்றத்திற்குச் தோன்றும் சந்தர்ப்பத்திலும் நீதிமன்றமானது அதன் தற்றுணிபில், மரணச் சொத்தை நிருவகிப்பதற்கு எவரேனுமாளை நியமிப்பது சட்ட முறையானதாதல் வேண்டுமென்பதுடன் மரணச்சொத்தின் பெறுமதி ஐந்து லட்சம் ரூபாவாக அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்கின்ற ஒவ்வொரு விடயத்திலும், இவ்வத்தியாயத்தில் தரப்பட்டுள்ள நடவடிக்கை முறைக்கிணங்க சாதாரண சந்தர்ப்ப சூழ்நிலைகளில் நிருவாகத்தைப் பெறுவதற்கு உரித்துடையவராயினும் சரி வேறுவகையாயினுஞ்சரி மரணச்சொத்தை நிருவகிப்பதற்கு எவரேனும்

ஆளொருவரை நியமித்தலும் வேண்டும், அத்துடன் பிரிவுகள் 518 முதல் 521 வரையிலான இரு பிரிவுமுட்பட்ட பிரிவுகளின் ஏற்பாடுகள் யாவும், அவை ஏற்புடைத்தாக்கப்படக்கூடிய அளவுக்கு, ஏதேனும் அத்தகைய நியமனத்திற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

**மரணச்சொத்து திருவாகத் தத்துவப் பத்திரங்களுக்கு அல்லது மரபுரிமையாண்மைச் சான்றிதழ்களுக்கு விண்ணப்பிக்கும் விதம்.**

528. (1) மரணச்சொத்து திருவாகத்தத்துவப் பத்திரங்களின் வழங்குகைக்காக அல்லது மரபுரிமையாண்மைச் சான்றிதழ்களுக்காக மாவட்ட நீதிமன்றத்திற்குச் செய்யப்படும் விண்ணப்பம் ஒவ்வொன்றும் மரணமெய்திய தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளாகச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், மனுமூலமாகவும் சத்தியக்கடதாசிமூலமாகவும் செய்யப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய மனு பின்வருவனவற்றை இலக்கமிடப்பட்ட பந்திகளில் எடுத்துக்காட்டுதலும் வேண்டும்:—

(அ) மரணசாதனம் இல்லை என்ற நிகழ்வு;

(ஆ) மரணமெய்தியவரின் இறப்பு;

(இ) மனுதாரரின் அறிவுக்கெட்டியவரை மரணமெய்தியவரின் மரபுரிமையாளர்கள்;

(ஈ) மரணமெய்தியவருக்குள்ள ஆதனத்தின் விபரங்களும் அமைவிடமும்;

(உ) மரணச்சொத்தின் பொறுப்புக்கள் பற்றிய விபரங்கள்;

(ஊ) மரணச் சொத்தின் கடன் தருநர் பற்றிய விபரங்கள்;

(எ) என்ன தன்மையில் மனுதாரர் கோருகிறார் என்பதும், அவ்வாறு செய்வதை நியாயப்படுத்தும் நிகழ்வுகளும்;

(ஏ) மரபுரிமையாளர்களால் உடன்பட்டுக் கொள்ளப்படின், மரபுரிமையாளர் ஒவ்வொருவரும் பெறுவதற்கு உரித்துடைய ஆதனத்தின் பங்கு .

(2) விண்ணப்பமானது மனுவிலுள்ள முக்கிய உறுதிக்கூற்றுக்களை முதற்றோற்றளவில் எண்பிப்பதற்குப் போதிய சான்றின் மூலம் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், மரணமெய்தியவரின் ஆகக்கிட்டிய உறவினர்களை எதிர்வாதிகளாகக் கூறுதலும் வேண்டும். மனுதாரர் தமது விண்ணப்பம் ஆளெவரினுலும் எதிர்க்கப்படுமென நம்புவதற்கு நியாயம் எதுவும் கொண்டிருக்கவில்லையானல் அவர் தமது மனுவுடன் அப்பயன்படும் சத்தியக்கடதாசியொன்றைக் கோப்பிடுதல் வேண்டும்.

(3) மனுதாரர் தமது மனுவுடன் –

(அ) 529 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலை வெளியிடுவதற்கான செலவை மேவுவதற்கான கட்டணக் கொடுப்பனவுக்கான எண்பிப்பையும்;

(ஆ) அவரது விண்ணப்பத்திற்குச் சம்மதிக்கின்ற அத்தகைய எதிர்வாதிகளின் எழுத்திலான சம்மதத்தையும்

சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

524, அத்துடன் 528 ஆகிய பிரிவுகளின் கீழான விண்ணப்பங்கள் தொடர்பிலான அறிவித்தலை வெளியிடுதல்.

529. (1) ஐந்நூற்றிருபத்துநாலாம் அல்லது 528ஆம் பிரிவின்கீழ் மாவட்ட நீதிமன்றம் ஒன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் அம்மாவட்ட நீதிமன்றத்தின் மரணசாதன அதிகாரப்பத்திர அலுவலரால் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன், மரணசாதன அதிகாரப்பத்திர அலுவலரால் அந்நோக்கத்துக்கெனப் பேணப்பட வேண்டிய தனியான இடாப்பொன்றில் பதிவு செய்யப்படுதலும் வேண்டும் ; அதன் பின்னர் அவ்வலுவலர் (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி தேவைப்படும் வெளியீடுகளைச் செய்விப்பார்.

(2) மாவட்ட நீதிமன்றம் ஒன்றின் மரணசாதன அதிகாரப்பத்திர அலுவலர், ஒவ்வொரு மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமையில் ஆரம்பிக்கும் வாரத்தின் ஏதேனும் நாளன்று முதலாம் அட்டவணையில் உள்ள 84 ஆம் படிவத்திலான அறிவித்தலொன்றைப் பின்வருவன தொடர்பிலான தகவலை உள்ளடக்கிச் சிங்களத்திலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் விதித்துரைக்கப்பட்ட உள்ளூர்ப்புதினத்தாள்களில் வெளியிடுவித்தல் வேண்டும்:–

(i) முற்போந்த ஒரு மாதத்தில் அம்மாவட்ட நீதிமன்றத்தினால் பெறப்பட்ட 524 ஆம் அல்லது 528 ஆம் பிரிவின் கீழான விண்ணப்பம் ஒவ்வொன்றும்; அத்துடன்

(ii) அந்த மாவட்ட நீதிமன்றத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டதும் முன்னைய மாதத்தில் அத்தகைய மாவட்ட நீதிமன்றம் தொடர்பில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் முதல் தடவையாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டதுமான 524 ஆம் அல்லது 528 ஆம் பிரிவின் கீழான விண்ணப்பம் ஒவ்வொன்றும்.

எவ்வாறாயினும், ஒவ்வொரு மாவட்ட நீதிமன்றத்தினும் பெறப்பட்ட 524 ஆம் அல்லது 528 ஆம் பிரிவின் கீழான விண்ணப்பம் ஒவ்வொன்றும் தொடர்பிலுமான தகவல், அடுத்தடுத்துவரும் இரண்டு மாதங்களில் இரு வெவ்வேறான சந்தர்ப்பங்களில் வெளியிடப்படும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தலானது, அறிவித்தல் தொடர்புறுத்துகின்ற எவரேனும் ஆளுக்கு ஏதேனும் மரணசாதனம் என் பிக்கப்பட்டுள்ளது என வெளிப்படுத்துகின்றதான கட்டளையொன்றை ஆக்குவதற்கு அல்லது மரணசாதனப் பத்திரங்களை இணைத்தாயினுஞ்சரி இணைக்காவிட்டாலுஞ்சரி மரணசாதன அதிகாரப் பத்திரத்தை அல்லது மரணச்சொத்து நிருவாகத் தத்துவப் பத்திரங்களை வழங்குவதற்கு, அல்லது மரபுரிமையாண்மைச் சான்றிதழ்களை வழங்குவதற்கு ஆட்சேபனை கொண்டுள்ள ஆட்களை, அறிவித்தலில் குறித்துரைக்கப்படுகின்றவாறாக, (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்டுள்ள முதல் வெளியீட்டுத் தேதியிலிருந்து அறுபது நாட்களுக்கு முந்தாததும் அத்துடன் அறுபத்தேழு நாட்களுக்குப் பிந்தாததுமான ஒரு தேதிக்கு முன்னர் சத்தியக்கடதாசி மூலம் ஆதாரப்படுத்தப்பட்ட எழுத்திலான ஆட்சேபனைகள் எவையேனும் இருப்பின் அவற்றைச் சமர்ப்பிக்குமாறு கோருதல் வேண்டும்.

(4) அத்தகைய ஆட்சேபனைகளின் பிரதிகள் எவையேனும் இருப்பின், அவை, அவற்றைத் தயாரிக்கின்ற ஆளினால், விடயத்திற்கேற்றவாறு 524 ஆம் அல்லது 528 ஆம் பிரிவின்கீழ் விண்ணப்பம் செய்கின்ற ஆளுக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆட்சேபனைகளில் பெயர்கள் குறிக்கப்பட்டிருக்கும் ஏனைய திறத்தவர்களுக்கும் சேர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

**பாதுகாவலரை அல்லது முகாமையாளரை நியமித்தல்.**

530. அத்தகைய அறிவித்தலில் பெயரிடப்பட்ட மரபுரிமையாளர்கள், மரணசாதனப் பொருள் பெறுநர்கள் அல்லது பயனுகரிகள் எவரும் இயற்கைப் பாதுகாவலர் ஒருவர் இல்லாத பராயமடையாதவராக இருந்தால் அல்லது பாதுகாவலரொருவரில்லாத சித்தசுவாதீனமற்ற ஆளாக இருந்தால் மாவட்ட நீதிபதிக்கு தனியறையில் விசாரிக்கப்பட வேண்டியதான விண்ணப்பமொன்றைச் செய்வதன்மீது பாதுகாவலர் அல்லது முகாமையாளர் ஒருவரை நியமிப்பதற்கான நடபடிகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

524 ஆம், 528 ஆம் பிரிவுகளின் கீழ் செய்யப்படும் விண்ணப்பத்தின் மீதான கட்டளை.

531. (1) ஐந்நூற்றிருபத்தொன்பதாம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலொன்றுக்கு மறுமொழியாக, 524 ஆம் அல்லது 528 ஆம் பிரிவின் கீழ் பெற்றுக்கொள்ளப்படும் ஏதேனும் விண்ணப்பம் தொடர்பாக அத்தகைய விண்ணப்பம் தொடர்பில் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ஆட்சேபனைகள் எவையேனும் பெறப்படாவிட்டால், நீதிமன்றமானது—

(அ) 524 ஆம் பிரிவின் கீழான விண்ணப்பத்தின் விடயத்தில், அளிக்கப்பட்ட சான்று உரியவாறு மரணசாதனம் எழுதியமை பற்றியதும் மனுதாரரின் தன்மைபற்றியதுமான முதற்றோற்ற எண்பிப்பை அளிப்பதற்குப் போதியது என நீதிமன்றம் திருப்திப்பட்டால், மரணசாதனம் எண்பிக்கப்படவேண்டுமென வெளிப்படுத்தும் கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும் ; அத்துடன் விண்ணப்பகாரர் —

(i) மரணசாதனத்தின் நிறைவேற்றுநராக அல்லது நிறைவேற்றுநர்களுள் ஒருவராக உரிமை கோரி அதற்கான மரணசாதன அதிகாரப் பத்திரம் தமக்கு வழங்கப்பட வேண்டுமெனக் கேட்டால், கட்டளையானது, அவரை நிறைவேற்றுநர் என வெளிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் இதனகத்துப் பின்னர் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக அதற்கிணங்க அவருக்கு மரணசாதன அதிகாரப்பத்திரம் வழங்குமாறு பணித்தலும் வேண்டும் ; அல்லது

(ii) நிறைவேற்றுநர் தவிர்ந்த வேறேதேனும் தன்மையில் உரிமை கோரி மாணமெய்தியவரின் ஆதனத்துக்கான நிருவாகம் தமக்கு வழங்கப்படவேண்டும் எனக் கேட்டால் அப்போது கட்டளையானது, மரணசாதனத்தின் பிரதியொன்றை இணைத்து, மரணசாதனத்துக்கிணங்க மரணமெய்தியவரது ஆதனத்தை நிருவகிப்பதற்கு விண்ணப்பகாரருக்கான ஒரு தத்துவ வழங்கலையும் உள்ளடக்குதல் வேண்டும்; அல்லது

(ஆ) 528 ஆம் பிரிவின்கீழான விண்ணப்பத்தின் விடயத்தில்—

(i) இதனகத்துப் பின்னர் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய மனுதார

ருக்கு மரணச்சொத்து நிருவாகத் தத்துவப் பத்திரங்களை வழங்குவதற்கான கட்டளையை ஆக்குதல் வேண்டும்; அல்லது

(ii) விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட மரபுரிமையாளர்களால் உடன்பட்டுக் கொள்ளப்படின் மரபுரிமையாளர் ஒவ்வொருவரும் பெறுவதற்கு உரித்துடைய ஆதனத்தின் பங்கையும் குறிப்பிட்டு விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட மரபுரிமையாளர்கள் ஒவ்வொருவருக்கும், முதலாம் அட்டவணையி லுள்ள 87அ என்னும் படிவத்திலான மரபுரிமையாண்மைச் சான்றிதழை வழங்குவதற்கான கட்டளையை ஆக்குதல் வேண்டும்;

(இ) மரபுரிமையாண்மைச் சான்றிதழ்கள் வழங்கப்படுவதற்காக 528 ஆம் பிரிவின்கீழான விண்ணப்பமொன்றின் விடயத்தில், இதனகத்துப் பின்னர் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய நீதிமன்றத்தின் அபிப்பிராயப்படி மரணச் சொத்தை நிருவகிப்பதற்கு எவரேனும் ஆளை நியமிப்பது அவசியமானதாக விருப்பின், நிருவகிப்பதற்கு உரித்துள்ள எவரேனுமாளுக்கு மரணச்சொத்து நிருவாகத் தத்துவப்பத்திரங்களை வழங்குவதற்கான கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

(2) மேலேயுள்ள உட்பிரிவு (1) (ஆ) (ii) என்பதன் கீழ் வழங்கப்பட்ட மரபுரிமையாண்மைச் சான்றிதழ்கள், அவற்றின் கண் குறிப்பிடு செய்யப்பட்டவரான மரணமெய்தியவரின் உண்மையான மரபுரிமையாளர்கள் என்பதற்குப் போதுமான எண்பிப்பாதல் வேண்டும் என்பதுடன் மரணசாதனமின்மையின்மீது எழும் ஏதேனும் உரிமை, உரித்து, அல்லது அக்கறை தொடர்பில் ஏதேனும் பங்கை உரிமைகோரும் நோக்கத்திற்கு முன்வைக்கவும்படலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்றைச் செய்யும் நோக்கத்திற்கென மரணசாதன அதிகாரப் பத்திர அலுவலர், சம்பந்தப்பட்ட விண்ணப்பத்திற்கு இயைபான எல்லாப் பத்திரங்களையும், அத்தகைய விண்ணப்பம் தொடர்பாக 529 ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு அடுத்த நாளன்று, தனியறையில் இருக்கும் நீதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், நீதிமன்றமானது உடனடியாக தோதான கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

524 ஆம் அல்லது 528 ஆம் பிரிவுகளின் கீழான விண்ணப்பங்களுக்கு ஆட்சேபனைகள் இருக்குமிடத்து நடவடிக்கைமுறை.

532. (1) 529 ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தல் ஒன்றுக்கு மறுமொழியாக 524 அல்லது 528 ஆம் பிரிவுகளின்கீழான ஏதேனும் விண்ணப்பம் தொடர்பாக, அத்தகைய விண்ணப்பம் தொடர்பில் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ஏதேனும் ஆட்சேபனைகள் கிடைக்கப்பெற்றால், நீதிமன்றமானது இதனகத்து ஏற்பாடுசெய்யப்பட்ட நடவடிக்கைமுறைக்கு இணங்க அத்தகைய விண்ணப்பத்தைக் கேட்டு விளங்கி தீர்மானிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அத்துடன் அத்தகைய நோக்கத்திற்காக, அத்தகைய விண்ணப்பத்தை இறுதியாகக் கேட்டுத் தீர்ப்பதற்கு ஒரு நாளைக் குறிக்கலாம். அத்துடன் இதன் 541 ஆம் பிரிவின் நியதிகளுக்கு ஏற்ப அவசியமென அது கருதுகின்றவாறான அத்தகைய கட்டளையையும் மேலதிகமாகச் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்றைச் செய்யும் நோக்கத்திற்கென, மரணசாதன அதிகாரப்பத்திர அலுவலர் சம்பந்தப்பட்ட விண்ணப்பத்திற்கு இயைபான எல்லாப் பத்திரங்களையும், 529 ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு அடுத்தநாளில் தனியறையிலுள்ள மாவட்ட நீதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

மரபுரிமையாண்மைச் சான்றிதழொன்றைப் பின்பற்றி செயற்படுவதன் பயன்.

532 அ. பிரிவு 531 (1) (ஆ) (ii) என்பதன் கீழ் மாவட்ட நீதிமன்றமொன்றினால் வழங்கப்பட்ட மரபுரித்தாண்மைச் சான்றிதலொன்றை முன்வைப்பதன் மீது ஏதேனும் பணம், அசைவுள்ள ஆதனம் அல்லது சான்றிதழ் அத்தகைய மரபுரித்தாண்மைச் சான்றிதழைப் பின்பற்றி ஏதேனும் வங்கியால் அல்லது நிறுவனத்தினால் அதற்கு உரித்துடைய எவரேனும் மரபுரிமையாளருக்குக் கையளிக்கப்படுமிடத்து அல்லது கைமாற்றப்படுமிடத்து அத்தகைய கையளிப்பு அல்லது கைமாற்றம் எந்த மரணமெய்தியவரின் ஆதனம் தொடர்பில் மரபுரித்தாண்மைச் சான்றிதழ் அவ்வாறு வழங்கப்படுகின்றதோ அந்த மரணமெய்தியவருக்கான கடப்பாடொன்றின் நிறைவேற்றுகையாகக் கருதப்படுதல் வேண்டும்.

இறுதிக் கேட்பின்போது நீதிமன்றம், வழக்கெழு வினாக்களை வகுத்தல்.

533. இறுதி விசாரணைக்கான 532 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட நாளில் அல்லது அது எந்த ஒரு நாளுக்கு முறையாக ஒத்திவைக்கப்படுகிறதோ அந்த நாளில் ஆட்சேபனைகளைக் கோப்பிடும் ஆட்கள், வாய்மொழி மூலமான சான்றின்பேரில், விளங்கப்படவேண்டுமென்பது போன்ற விண்ணப்பத்திற்கு ஆட்சேபனை ஏதுக்கள் உள்ளனவென நீதிமன்றத்தைத் திருப்திசெய்தால்,

அப்போது நீதிமன்றம் கட்சிக்காரர்களுக்கிடையே எழுவதாகத் தோன்றும் வழக்கெழு வினுக்களை வகுத்தல் வேண்டும் என்பதுடன், அந்த நோக்கத்துக்காக 386 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்படவேண்டிய ஒரு நாளில் அவை விளங்கப்படுதல் வேண்டுமெனப் பணித்தலும் வேண்டும்.

இறுதிக் கேட்பின்போது ஆக்கப்படக்கூடிய கட்டளைகள்.

534. (1) இறுதிக் கேட்பின்போது அல்லது வருக்கப்பட்ட வழக்கெழு வினுக்கள் தீர்மானிக்கப்படுவதன் மேல்—

(அ) விண்ணப்பத்திலுள்ள முக்கிய உறுதிக்கூற்றுக்களைப்பற்றிய முதற்றோற்ற எண்பிப்பு மறுத்துரைக்கப்படவில்லையென நீதிமன்றத்துக்குத் தோன்றினுல், நீதிமன்றம் உடனடியாக விடயத்திற்கேற்றவாறு மரணசாதன அதிகாரப் பத்திரம், அல்லது மரணசாதனம் இணைக்கப்பட்ட மரணச்சொத்து, நிருவாகத்தத்துவப் பத்திரம், அல்லது இதனகத்துப்பின்னர் விதித்துரைக்கப்படும் நிபந்தனைகளுக்கமைவாக மரணச்சொத்து நிருவாகத் தத்துவப் பத்திரம் அல்லது மரபுரிமையாண்மைச் சான்றிதழ் என்பவற்றுக்கான கட்டளைகள் ஆக்குதல் வேண்டும்; அல்லது

(ஆ) மனுவிலுள்ள முக்கிய சார்த்தல்களைப்பற்றிய முதற்றோற்ற எண்பிப்பு மறுத்துரைக்கப்பட்டிருக்கிறதென நீதிமன்றத்துக்குத் தோன்றினுல், அப்போது நீதிமன்றம் அந்த மனுவைத் தள்ளுபடி செய்தல் வேண்டும். அத்துடன் ஆளெவரும் ஆட்சேபனைகளைக் கோப்பிலிட்டுள்ள சந்தர்ப்பத்தின்போது அத்தகைய கேட்பின் அல்லது வழக்கெழு வினுக்கள் மீதான விளக்கத்தில் மரணசாதன அதிகாரப் பத்திரத்தை வைத்திருத்தலுக்கு அல்லது இறந்துபோனவரின் மரணச்சொத்து தொடர்பான நிருவாகத் தத்துவம் மனுதாரருக்கு வழங்கப்படுவதற்குப் பதிலாக தனக்கு வழங்கப்படுவதற்கு அவருக்குள்ள உரிமையை நிலைநாட்டியிருந்தால் அப்போது நீதிமன்றம், இதனகத்துப்பின்னர் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய அவர் சார்பில் அப்பயன்பட மேலும் ஒரு கட்டளையை ஆக்குதல் வேண்டும் ; அல்லது

(இ) ஒரு மரபுரிமையாளர் என மனுவில் பட்டியலிடப்பட்ட எவரேனும் ஆள் உண்மையிலே மரபுரிமையாளர் இல்லையென அல்லது ஒரு மரபுரிமையாளரென மனுவில் பட்டியலிடப்படாத வேறு எவரேனும் ஆள் தான் மர

புரிமையாளரொருவரென அங்கீகரிக்கப்படு வதற்கான அவரது உரிமையை நிறுவியுள்ளா ரென நீதிமன்றத்திற்குத் தோன்றினால், அப் போது நீதிமன்றம் அதற்கிணங்க ஒரு கட் டளையை ஆக்குதல் வேண்டும்; அல்லது

(ஈ) எவரேனும் இறந்துபோனவரின் மரபுரிமையா ளரின் மரபுரிமையாண்மைச் சான்றிதழ்களுக் கான ஒரு விண்ணப்பத்தின் விடயத்தில், அதற்குப்பதிலாக, அத்தகைய இறந்துபோன வரின் மரணச்சொத்தின் நிருவாகத்திற்கான மரணச்சொத்து நிருவாகத் தத்துவப்பத்திரம் வழங்கப்படவேண்டுமென நீதிமன்றத்திற்குத் தோன்றினால், அப்போது நீதிமன்றமானது, இதனகத்துப்பின்னர் குறித்துரைக்கப்படும் நிபந்தனைகளுக்கமைவாக, இவ்வத்தியாயத் தின் ஏற்பாடுகளுக்கிணங்க மரணச் சொத்து நிருவாகத் தத்துவத்தை வழங்குவதற்கான கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

(2) ஒன்றில் இந்த விண்ணப்பத்தைச் செய்யும் சந் தர்ப்பத்தில் அல்லது அதற்குப் பின்னர் இறந்தவரின் மரணசாதனம் தொடர்பாக மரணசாதன அதிகாரப் பத்திரம் அல்லது அவருடைய ஆதனத்தின் நிருவாகம் மனுதாரர் தவிர்ந்த வேறு எவரேனும் ஆளுக்கு வழங் கப்படாதிருக்கும்வரை, மனுவைத் தள்ளுபடி செய்த லானது, மனுதாரரால் விண்ணப்பமானது புதுப்பிக்கப் படுவதற்கு ஒரு தடையாகவிருத்தலாகாது.

**கூட்டுத்தாபனமானது நிருவாகியாக அல்லது நிறைவேற்றுநராக நியமிக்கப்பட்டுள்ளவிடத்து நடவடிக்கை முறை.**

535. (1) கூட்டுத்தாபனமொன்று தனியாக அல் லது வேறெவரேனுமாளுடன் கூட்டாக ஒரு மரண சாதனத்தின்கீழ் நிறைவேற்றுநராக நியமிக்கப்பட் டுள்ளவிடத்து, நீதிமன்றமானது, மரணசாதன அதி காரப்பத்திரத்தை, அத்தகைய கூட்டுத்தாபனத்துக்கு, சந்தர்ப்பம் தேவைப்படுத்தக்கூடியவாறாக, தனியா கவோ அல்லது அத்தகைய வேறாளுடன் கூட்டா கவோ வழங்கலாமென்பதுடன், கூட்டுத்தாபனமும் அதற்கிணங்க நிறைவேற்றுநராகச் செயலாற்றலாம்.

(2) மரணச்சொத்து நிருவாகத் தத்துவப்பத்திரங் கள் எக்கூட்டுத்தாபனத்துக்கேனும், தனியாக அல்லது வேறாளுடன் கூட்டாக வழங்கப்படலாம் என்பதுடன் கூட்டுத்தாபனமும் அதற்கிணங்க நிருவாகியாகச் செய லாற்றலாம்.

(3) அந்நோக்கத்திற்கென, அத்தகைய கூட்டுத்தாப னத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எவரும், கூட்டுத்தாபனத்தின் சார்பில் சத்தியக்கடதாசிகளை முடிக்கலாம், பதவிப்பிரமாணஞ் செய்துகொள்ளலாம்; பிணைப்பொறுப்புக் கொடுக்கலாம் என்பதுடன், நீதி

மன்றம் தேவைப்படுத்தக்கூடிய வேறெச் செயலையும் அல்லது விடயத்தையும் செய்யலாம்; அத்துடன், அத்தகைய அலுவலரின் செயல்கள் கூட்டுத்தாபனத்தைக் கட்டுப்படுத்துவனவாக இருத்தல் வேண்டும்.

தடையறிவிப் பொன்றை எவர் கோப்பிலிடலாம்.

536. ஐந்நூற்றிருபத்தொன்பதாம் பிரிவின்கீழ் அறிவித்தல் வெளியிடப்பட்ட பின்னரும் மனுவின் இறுதியான விசாரணைக்கு முன்னரும் எந்நேரத்திலேனும் மரணசாதனத்தில் அல்லது இறந்துபோனவரது ஆதனத்தில் அல்லது மரணச்சொத்தில் அக்கறையுடையவரான ஆளெவரேனும், அவர் மனுவில் குறித்துரைக்கப்பட்ட ஓர் ஆளாக இல்லாதவிடத்தும் மனுதாரரின் உரிமைக்கோரிக்கை அனுமதிக்கப்படுவதற்கு எதிராக முதலாவது அட்டவணையில் 91ஆம் இலக்கப் படிவத்திற்கிணங்கும் தடையறிவிப்பொன்றை அல்லது அதற்கு எதிரான ஓர் அறிவித்தலை அதே நீதிமன்றத்தில் கோப்பிலிடுவதன் மூலம் அந்த விடயத்தில் இடைவருவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும் என்பதுடன் நீதிமன்றமானது, ஆட்சேபனைகள் எவையுமிருப்பின் அவற்றைக் கோப்பிலிடுவதற்கு அத்தகைய ஆளை அனுமதிக்கலாம் என்பதுடன் மனுவின் இறுதியான கேட்டலை ஒத்திவைக்கலாம்.

மரணசாதன அதிகாரப் பத்திரத்தை மரணச் சொத்து திருவாகத் தத்துவத்தை அல்லது உரித்தாண்மைச் சான்றிதழை மீள அழைப்பதற்கு அல்லது ஒழிப்பதற்கு அல்லது இல்லாதாக்குவதற்கான தத்துவம்.

537. இறந்துபோன ஆட்களின் மரபுரிமையாண்மைச் சான்றிதழொன்று வழங்கப்பட்டிருக்கும் அல்லது மரண சாதன அதிகாரப்பத்திரம் அல்லது இறந்துபோன ஆட்களின் ஆதனத்தின் திருவாகத் தத்துவமொன்று வழங்கப்பட்டிருக்கும் ஏதேனும் விடயத்தில் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கக் கூடாதென அல்லது, 'மரணசாதனம்' எனப்பிக்கப்பட்டிருக்கக் கூடாதென மரணசாதன அதிகாரப் பத்திரத்தின் வழங்கல் அல்லது மரணச்சொத்து திருவாகத் தத்துவத்தின் வழங்கல் செய்யப்பட்டிருக்கக் கூடாதென திருப்தியடைந்ததன் மேல், சொல்லப்பட்ட சான்றிதழை இல்லாதாக்குவதற்கு; அல்லது சொல்லப்பட்ட மரணசாதன அதிகாரப்பத்திரத்தை அல்லது மரணச்சொத்து திருவாகத் தத்துவத்தின் வழங்கலை மீள அழைத்து அவ்வழங்கலை ஒழிப்பதற்கு மாவட்ட நீதிமன்றம் தகுதிவாய்ந்ததாதல் வேண்டும்; அத்துடன் மரணசாதன அதிகாரப் பத்திரத்தின் கீழ் அல்லது மரணச்சொத்து திருவாகத் தத்துவப்பத்திரத்தின் கீழ் திருவாகஞ் செய்தலைச் சாத்தியமற்றதாக்கும் அல்லது பயனற்றதாக்கும் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளனவெனத் திருப்தியடைவதன்மேல், மரணசாதன அதிகாரப் பத்திரத்தை அல்லது மரணச்சொத்து திருவாகத் தத்துவத்தை எந்நேரத்திலாவது மீள அழைப்பதற்கு மாவட்ட நீதிமன்றம் தகுதிவாய்ந்ததாதலும் வேண்டும்.

மீள அழைப்பு முதலியனவற்றிற்கான விண்ணப்பம்.

538. மரபுரிமையாண்மைச் சான்றிதழ்களை, மரண சாதன அதிகாரப் பத்திரத்தை, மரணசாதன திருவாகத் தத்துவத்தின் வழங்கல்களை இல்லாதாக்குதற்கான, மீள அழைப்பதற்கான அல்லது ஒழிப்பதற்கான எல்லா விண்ணப்பங்களும், சுருக்கமுறை நடவடிக்கை விதிகளைப் பின்பற்றி மனு மூலம் செய்யப்படுதல் வேண்டும்; அத்துடன் நீதிமன்றத்தினது அபிப்பிராயப்படி, அவ்விதமான விண்ணப்பத்தைச் செய்வதற்கு அந்த மனுதாரருக்கு உரித்தளிக்கும் அத்தகைய ஓர் அக்கறை அந்த மனுதாரருக்கு, இறந்த ஆளின் ஆதனத்தில் இருப்பதாக அவர் தமது மனுவில் காட்டினாலன்றி, அவ்விதமான எந்த விண்ணப்பமாவது ஏற்றுக் கவனிக்கப்படுதலாகாது.

பொருட்பட்டியலும் பெறுமான மதிப்பீடும்.

539. (1) இறந்துபோன ஆளொருவரது மரண சாதனத்துக்கான அதிகாரப்பத்திரம் அல்லது இறந்துபோன ஆளொருவரது ஆதனத்துக்கான மரணச்சொத்து திருவாகத் தத்துவம் வழங்கப்படுவதற்கு ஆளொருவர் உரித்துடையவரென வெளிப்படுத்தும் கட்டளையொன்று ஒரு மாவட்ட நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்டுள்ளதான ஒவ்வொரு விடயத்திலும், அத்தகைய கட்டளை எந்த சொல்லப்பட்ட ஆளுக்குச் சாதகமாக அல்லது நிறைவேற்றுநருக்குச் சாதகமாக அல்லது திருவாகிக்குச் சாதகமாக ஆக்கப்படுகின்றதோ அந்த சொல்லப்பட்ட ஆள் அல்லது நிறைவேற்றுநர் அல்லது மரணச்சொத்து திருவாகி, முதலாம் அட்டவணையிலுள்ள 92 ஆம் இலக்கப் படிவத்திற்கிணங்க ஒரு நிறைவேற்றுநருக்கான அல்லது மரணச்சொத்து திருவாகிக்கான சத்தியத்தை அக்கட்டளை ஆக்கப்பட்ட பதினைந்து நாட்களுக்குள் செய்து கொள்ளுதலும், அதன்பின்னர் சத்தியப்பிரமாணம், செய்து கொண்ட தேதியிலிருந்து ஒருமாத காலத்தினுள் முதலாம் அட்டவணையின் 92ஆம் இலக்கப் படிவத்திற்கிணங்க, இறந்துபோன ஆளின் ஆதனத்தினதும் பொருட்களினதுமான பொருட்பதிவேடொன்றை அவற்றின் பெறுமான மதிப்பீட்டுடன் சேர்த்து நீதிமன்றத்தில் கோப்பிலிடுதலும், அவர்களது கடமையாதல் வேண்டும் என்பதுடன் விடயத்திற்கேற்ப நீதிமன்றமானது உடனடியாக மரணசாதன அதிகாரப்பத்திரத்தை அல்லது மரணச்சொத்து திருவாகத் தத்துவத்தை வழங்குதல் வேண்டும்.

(2) உரித்தாண்மைச் சான்றிதழொன்று எவரேனும் ஆளுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையவரென அவரை வெளிப்படுத்தி 531(i) ஆ(ii)ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்று செய்யப்படுவதன்மேல், நீதிமன்றமானது அத்தகைய ஆளுக்கு அத்தகைய சான்றிதழை உடனடியாக வழங்கலாம்.

மட்டுப்பாடுடைய மரணசாதன அதிகாரப்பத்திரமும் நிருவாகத் தத்துவப் பத்திரமும்.

540. ஒரு மரணசாதன அதிகாரப்பத்திரத்தின் அல்லது மரணச்சொத்து நிருவாகத் தத்துவத்தின் பயன்பாட்டுக் காலவெல்லை தொடர்பில் அல்லது அதன்கீழ் நிருவகிக்கப்படவுள்ள ஆதனம் தொடர்பில், அல்லது வழங்கல்களினால் ஒப்படைக்கப்பட்ட ஆதனத்தைக் கையாளுவதற்கான தத்துவம் தொடர்பில், ஆன மட்டுப்பாடுகளுடன் கூடிய ஒரு மரணசாதன அதிகாரப்பத்திரத்தின் வழங்கலை அல்லது மரணச்சொத்து நிருவாகத் தத்துவத்தின் வழங்கலைப், பின்வரும் சந்தர்ப்பங்களிற் செய்வதற்கு மாவட்ட நீதிமன்றம் தகுதி வாய்ந்ததாதல் வேண்டும்:—

(அ) இறந்தவரினது மூல மரணசாதனம் அவரிறந்தபின் காணாமற்போய், ஆனால் அதன் பிரதியொன்று பேணிவைக்கப்பட்டிருந்தால் மூல மரணசாதனம் நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்படும் வரைக்கும் அந்தப் பிரதிக்கான மரணசாதன அதிகாரப்பத்திரம் மட்டுப்படுத்தப்பட்டு வழங்கப்படலாம்;

(ஆ) அதேபோன்ற சமயத்திலும், அதேவிதமான மட்டுப்பாட்டுடனும் அதன் பிரதியெதுவும் பேணிவைத்திருக்கப்படாவிட்டால், வரைவு மரணசாதன அதிகாரப்பத்திரம் வழங்கப்படலாம், அல்லது, வரைவு மரணசாதனம் எதுவும் கிடைக்கப் பெறுவதற்கில்லாதவிடத்தின் அப்போது சான்று மூலம் நிறுவப்படக்கூடிய வரை அந்த மரணசாதனத்தின் பொருளடக்கம் பற்றிய அல்லது அந்த மரணசாதனத்தின் சாராம்சமும் பயனும் பற்றிய மரணசாதன அதிகாரப்பத்திரம் வழங்கப்படலாம்.

(இ) மூல மரணசாதனமானது இலங்கைக்கு வெளியே வதிபவரும் அந்த மூல மரணசாதனத்தை நிறைவேற்றுநரிடம் கையளிப்பதற்கு நிர்ப்பந்தப்படுத்தப்பட முடியாதவராக, இருக்கின்றவருமான எவரேனும் ஆளிடம் இருந்து, நிறைவேற்றுநர் அதன் ஒரு பிரதியைக் காண்பித்தால் அப்போது, அந்த மூல மரணசாதனம் நீதிமன்றத்துக்குக் கொண்டு வரப்படும் வரைக்கும் மட்டுப்படுத்தப்பட்டு அந்த பிரதிக்கான மரணசாதன அதிகாரப்பத்திரம் வழங்கப்படலாம்; எவ்வாறாயினும், மரணசாதனம் இலங்கைக்கு வெளியே முறைப்படி எண்பிக்கப்பட்டிருப்பின், அவ்

வெளிநாட்டு மரணசாதன அதிகாரப்பத்திரம் தருந்த எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்படுவதன்மேல் வழங்கலில் மட்டுப்பாடு எதுவுமின்றி நிறைவேற்றுநருக்கு மரணசாதன அதிகாரப்பத்திரம் வழங்கப்படலாம்.

(ஈ) ஒரு மரணசாதனத்தின் தனியொரு நிறைவேற்றுநர் இலங்கைக்கு வெளியே வதிந்தால் அல்லது ஒருவருக்கு மேற்பட்ட நிறைவேற்றுநர்கள் இருந்து, அவர்களெல்லோரும் இலங்கைக்கு வெளியே வதிந்தால் அல்லது இலங்கையில் வதிகின்ற அத்தகைய நிறைவேற்றுநர்கள் செயலாற்றுவதற்கு மறுத்தால், அப்போது அந்த நீதிமன்றம், அந்த மரணச்சாதனத்தின் பிரதி இணைக்கப்பட்ட மரணச்சொத்து நிருவாகத் தத்துவத்தை இலங்கையுள் அந்த நிறைவேற்றுநரது அல்லது நிறைவேற்றுநர்களது அற்றோணியாக அந்நோக்கத்துக்கென அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் மூலம் நியமிக்கப்படுபவரான எவரேனும் ஆளுக்கு வழங்கலாம்; அவ்விதம் செய்யப்படும் வழங்கல், அந்த நிறைவேற்றுநர் அல்லது நிறைவேற்றுநர்களுள் ஒருவர் வந்து தாமே மரணசாதன அதிகாரப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளும் வரையில், முதல்வரின் பயன்பாட்டுக்கும் நன்மைக்கும் ஆனதாக மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். தற்போது கூறப்பட்ட ஏதுக்களுள் ஏதேனுமொன்றின் நிமித்தம் மூல ஆவணம் கொண்டுவரப்பட முடியாதிருக்கின்றமை காரணமாக, இந்த விடயத்தில் எண்பிப்புக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணமானது மூல ஆவணத்தின் பிரதியொன்றாக அல்லது மூல ஆவணத்தை பதிலீடு செய்யும் ஓர் ஆவணமாக இருக்குமெனில், வழங்குதலானது, மூல ஆவணம் நீதிமன்றத்துக்குள் கொண்டுவரப்படும் வரைக்குமென மேலும் மட்டுப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்;

ஆயின், மேலும், ஒருவருக்கு மேற்பட்ட நிறைவேற்றுநர்கள் இருக்குமிடத்து வழங்குதலைக் கோரி விண்ணப்பஞ் செய்பவர் அந் நிறைவேற்றுநர்களெல்லோரினதும் அற்றோணியாக இராதுவிட்டால், எஞ்சியுள்ள நிறைவேற்றுநர்கள் செயலாற்ற இயலாதென மறுத்துரைக்கும் வரையில், அவருக்கு நிருவாகத் தத்துவம் வழங்கப்படுதலாகாது.

(உ) ஒரு மரணசாதனத்தின் விடயத்தில், செயலாற்றுவதற்கு விரும்பும் நிறைவேற்றுநர் எவராவது இலங்கையில் இல்லாதுவிட்டால், முதல்வர் வந்து அவரே நிருவாகத் தத்துவப் பத்திரத்தைப் பெறும்வரைக்குமென மட்டுப் படுத்தப்பட்ட, மரணசாதனத்தின் பிரதி இணைக்கப்பட்ட நிருவாகத் தத்துவப்பத்திரம் இலங்கையில் இருக்காத, மரணசாதன வழி எஞ்சிய பொருள் பெறுநரது அல்லது மரபுரிமையாளருடைய அற்றேணிக்கு வழங்கப்படலாம். அல்லது அதே விதமான சந்தர்ப்பத்தில் மரணசாதனவழி எஞ்சிய பொருள் பெறுநரும் பராயமடையாதவரும் இலங்கையில் இருப்பவருமான ஒருவரின் ஒரு பாதுகாவலருக்கு பராயமடையாத காலம்வரைக்கும் என மட்டுப்படுத்தப்பட்டு அல்லது சித்தசுவாதீன மற்றவரும் மரணசாதனவழி எஞ்சிய பொருள் பெறுநரும் இலங்கையில் இருப்பவருமான ஒருவரது சொத்துக்களின் முகாமையாளராயிருப்பவருக்கு, சித்தசுவாதீனமற்ற காலம்வரைக்கும் என மட்டுப்படுத்தப்பட்டு வழங்குகை செய்யப்படலாம்.

(ஊ) மரணசாதனமில்லாதவிடயத்தில் இறந்தவரினது ஆதனத்துக்கான நிருவாகத் தத்துவங்கள், அதேவிதமாக மட்டுப்படுத்தப்பட்டு பராயமடையாத ஒரு மரபுரிமையாளரது பாதுகாவலருக்கு அல்லது சித்தசுவாதீனமற்றவராயுள்ள ஒரு மரபுரிமையாளரது சொத்துக்களின் முகாமையாளருக்கு வழங்கப்படலாம்.

(எ) விரிவான வழங்குகை அவசியமற்றதென நீதிமன்றம் கருதும் எச்சந்தர்ப்பத்திலும், ஏதேனுமோர் குறித்த ஆதனத்துக்கு மட்டுமென அல்லது ஏதேனுமொரு குறித்த நோக்கத்துக்கு மட்டுமென மட்டுப்படுத்தப்பட்ட மரணசாதன அதிகாரப்பத்திரத்தை அல்லது நிருவாகத் தத்துவத்தை அது வழங்கலாம்.

முற்போந்த எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மட்டுப்படுத்தப்பட்ட வழங்குகை அந்த நீதிமன்றத்தினால் செய்யப்படுதலை நீதியானதாக்குவதற்கு அவசியமான முக்கிய இயைபான நிகழ்வுகள் அந்த விண்ணப்ப மனுவில் காட்டப்படுதல் வேண்டும் என்பதுடன், கட்டளை ஆக்கப்படுவதற்கு முன்னதாக முதற்றோற்றச் சான்றின் மூலம் அவை நிறுவப்படுதலும் வேண்டும்.

வழக்கு முடியும் வரையிலான நிருவாகம்.

541. (1) இறந்த ஆளொருவரின் மரணசாதனம் செல்லுபடியானதா அல்லவா என்பதுபற்றிய, அல்லது மரணசாதன அதிகாரப்பத்திரம் அல்லது மரணச் சொத்து நிருவாகத் தத்துவப்பத்திரம் பெறுவதற்கான, அல்லது அதனைத் திரும்ப அழைப்பதற்கான அல்லது ஒழிப்பதற்கான அல்லது மரபுரிமையாண்மைச் சான்றிதழ்களைப் பெறுவதற்கான, எவையேனும் வழக்கு நடவடிக்கைகள் முடிவுறுதிருக்கின்றவிடத்து, நீதிமன்றமானது ஒன்றில் முறையற்ற தாமதம் என்பதை ஏதுவாக வைத்து அல்லது ஏதேனும் போதிய காரணமாக—

(i) நிருவாகியொருவருக்கு அவ்வழக்கு நடவடிக்கைக் காலம் வரைக்குமென மட்டுப்படுத்தி இறந்த ஆளினது மரணச்சொத்திற்கான நிருவாகத் தத்துவப்பத்திரங்களை வழங்கலாம், அத்தகைய நிருவாகி நீதிமன்றத்தினது நேரடிக் கட்டுப்பாட்டுக்கு அமைந்திருத்தல் வேண்டுமென்பதோடு அதனது பணிப்பின் கீழ்ச் செயலாற்றுதலும் வேண்டும். அத்துடன் மரணச்சொத்தைப் பங்கீட்டளிக்கும் உரிமையை உடையவராதலாகாது, அல்லது

(ii) மரணசாதன அதிகாரப்பத்திரம் அல்லது மரணச்சொத்து நிருவாகத் தத்துவப்பத்திரம் வழங்கப்படுவதற்குமுன்னர், இறந்த ஆளினது மரணச்சொத்திலுள்ள ஏதேனும் ஆதனத்தை விற்பனைசெய்வது அவசியமானதாக வருகின்றவிடத்து, நீதிமன்றமானது அத்தகைய ஆதனத்தை விற்கும் நோக்கத்துக்காக மட்டுப்படுத்தப்பட்ட தத்துவப்பத்திரங்களை வழங்கலாம். அச்சந்தர்ப்பத்தில் அத்தகைய ஆதனம் அந்த வழங்குகையில் குறித்துரைக்கப்படுதல் வேண்டுமென்பதோடு அத்தகைய வழங்குகையானது பின்வரும் நிபந்தனைகளுக்கமைவாக நிருவாகத் தத்துவப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை வெளிப்படையாகக் கூறுதலும் வேண்டும்:—

(அ) விற்பனையானது, தனிப்பட்ட ஒப்பந்தம் மூலமானதாயின், நீதிமன்றத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலையில் இருத்தல் வேண்டும்; அல்லது பகிரங்க ஏல விற்பனை மூலமானதாயின், முதற்கூறு விலையின்படி அல்லது வேறுவகையாக இருத்தல் வேண்டும்;

(ஆ) விற்பனையால் வரும் தேறிய வரும்படிகள் நீதிமன்றம் விதித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய காலத்துக்குள் நீதிமன்றத்தில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்;

(இ) எந்நிருவாகிக்குத் தத்துவப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளனவோ அந்நிருவாகி, நீதிமன்றத்தினால் விற்பனையானது, உறுதிப்படுத்தப்படுவதற்கு முன்னதாக, அசைவற்ற ஆதனத்தின் உரித்துமாற்றல் உறுதி எதனையும் எழுதி நிறைவேற்றுவதற்குத் தத்துவமுடையவராகார்; அத்துடன்

(ஈ) சூழ்நிலைக்கேற்ப விதிப்பது பொருத்தமானதென நீதிமன்றம் கருதக்கூடிய வேறேதேனும் பொருத்தனை.

(2) இப்பிரிவின்கீழ் தத்துவப்பத்திரங்களை வழங்குவதற்கான கட்டளையொன்றை ஆக்குமுன்னர் மரணச்சாதன அதிகாரப்பத்திரத்துக்கான அல்லது மரணச்சொத்து நிருவாகத் தத்துவப்பத்திரத்துக்கான அல்லது மரபுரிமையாண்மைச் சான்றிதழுக்கான மூல மனுவுக்கான எதிர்வாதிகளுக்கு அவ்விண்ணப்பம்பற்றி அறிவித்தல் கொடுக்கவேண்டும் என்பதோடு அவர்கள் அல்லது மரணச்சொத்தில் அக்கறையுள்ள வேறெவரேனும் ஆள், அத்தகைய விற்பனைக்கு தமது சம்மதத்தைத் தெரிவித்திருந்தாலொழிய, அத்தகைய விற்பனைக்கு எதிராகக் கூறவிரும்புவதைக் கூற அனுமதிக்கப்படுதலும் வேண்டும்.

மட்டுப்படுத்தப்படாதபோது மரணச்சொத்து நிருவாகத் தத்துவத்தின் தத்துவம்.

542. வழங்கலைச் செய்யும் கட்டளையில் மட்டுப்பாடெதுவும் வெளிப்படுத்தப்படாவிடில், மரணசாதன அதிகாரப்பத்திரத்தின் வழங்கலினால் சான்று செய்யப்பட்ட அல்லது மரணச்சொத்து நிருவாகத்தத்துவத்தின் ஒரு வழங்கலின் அளிப்பினால் உரித்துமாற்றப்பட்ட மரணச்சொத்து நிருவாகத் தத்துவம் 554அ என்னும் பிரிவின்கீழ் இறந்த ஆளொருவரின் ஆதனமில்லையெனக் கருதப்படுகின்றவாறான அத்தகைய ஆதனம் தவிர்ந்த ஏனைய, இலங்கையிலுள்ள ஒவ்வொரு அசையும் அசையாத, இறந்த ஆளொருவரின் ஆதனத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் அல்லது நிறைவேற்றுநர் அல்லது நிருவாகியின் வாழ்நாளில் நிருவகிக்கப்படாத அல்லது நீடித்திராத அத்தகைய பகுதிக்கு நீடிக்கின்றது. அல்லது நிறைவேற்றுநரின் அல்லது நிருவாகியின்

இறப்பு அல்லது நிருவாகத்தின் நிறைவு இதில் எது முதலில் நிகழ்கிறதோ அதன் பிரகாரம் சொல்லப்படும் ஆவணம் முழுவதும் நிருவகிக்கப்படும்வரை நீடிக்கின்றது.

ஆதனக்காப்புப் பத்திரங்கள்.

543. இலங்கையில் ஆதனத்தை விட்டு ஆள் எவராவது இறந்தால், அத்தகைய ஆதனம் எந்த மாவட்டத்திலமைந்துள்ளதோ அம்மாவட்டத்தின் நீதிமன்ற நீதிபதி, அவருடைய திருப்திக்கு நிகழ்வுகள் உண்மையென்று, உறுதிப்படுத்தப்பட்டதன்மேலும், அவ்விதம் இறக்கும் ஆளின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்கு உரித்துக்கொண்டுள்ள இலங்கையிலுள்ள கிட்டிய உறவினர் அல்லது வேறு ஆள் எவரும் இல்லையெனக் காண்பிக்கப்பட்டதன் மேலும் நிறைவேற்றுநர் எவரினால் அல்லது நிருவாகி எவரினால் அல்லது மரபுரிமையாண்மை சான்றிதழொன்று எந்த மரபுரிமையாளருக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடுமோ அந்த எவரேனும் மரபுரிமையாளரினால் அந்த ஆதனம் உரிமைகோரப்படும் வரையில் அதன் பொறுப்பையேற்பதற்காக ஓர் ஆளுக்கு அல்லது அதற்குமேற்பட்ட ஆட்களுக்கு முதலாம் அட்டவணையிலுள்ள 91 ஆம் இலக்கப் படிவத்தில் ஆதனக்காப்புப் பத்திரங்கள் வழங்குதல் வேண்டும்.

பெயர்குறித்து நியமித்தல்.

544. (1) (அ) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின் கருத்திற்குட்பட்ட உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கியில் நடைமுறைக் கணக்கொன்றைத் தவிர்ந்த வேறு ஏதேனும் கணக்கில் பணத்தை வைத்திருக்கும்;

(ஆ) 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தில் வரைவிலக்கணங் கூறப்பட்டவாறான ஒரு கம்பனியில் ஏதேனும் பங்கை வைத்திருக்கும்;

(இ) காப்புறுதித் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, காப்புறுதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினால் அல்லது 1979 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, காப்புறுதி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் கூட்டுத்தாபனத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் அல்லது 1962 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, காப்புறுதிக் கட்டுப்பாட்டுச் சட்டம் என்பதன்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் கம்பனியால் வழங்கப்பட்ட ஏதேனும் ஆயுட் காப்புறுதிப் பத்திரத்தை வைத்திருக்கும்;

(ஈ) 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக் கம்பனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் நிதிக் கம்பனியில் வைப்பிலிடப் பட்ட ஏதேனும் பணத்தை வைத்திருக்கும்;

(உ) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின் கருத்தினுள் உரிமமளிக் கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கியில் ஏதே னும் நிலவறையிலுள்ள ஏதேனும் வேறு அசையும் ஆதனத்தை வைத்திருக்கும்,

பதினாறு வயதிற்கு மேற்பட்ட எவரேனும் ஆள் ("நிய மத்தர்" என இதனகத்துப்பின்னர் குறிப்பீடுசெய்யப் படும்) ஓர் ஆளை பெயர்குறித்து நியமிக்கலாம். அவ ருக்கு இதனகத்துப்பின்னர் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய முதல் குறிப்பிடப்பட்ட ஆளின் வர வில்லுள்ள அல்லது பெயரிலுள்ள அத்தகைய பணம், பங்கு அல்லது வேறு அசையும் ஆதனம் அல்லது அத் தகைய காப்புறுதிப்பத்திரத்தின்கீழ் செலுத்தப்படற் பாலதான பணம் அவரின் இறப்பின்மீது செலுத்தப்படு தல் வேண்டும் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பந்தியின்கீழ் செய்யப்பட்ட ஒரு பெயர்குறித்த நியமனம், அவரது இறுதி மரணசாத னத்தில் உள்ளதுக்கு முரணாக எது எப்படியிருப்பினும் பெயர்குறித்து நியமித்தவரின் இறப்பின்மீது பயனுறு தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் பெயர்குறித்த நியமனம், பெயர்குறித்து நியமித்தவ ரின் வாழ்நாளில் நியமத்தரின் இறப்பினால் அல்லது ஒரு அத்தாட்சிப்படுத்துபவரின் (அவர் பெயர்குறித்து நியமித்தவரின் ஒப்பத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்) முன்னிலையில் பெயர்குறித்து நியமித்தவரினால் ஒப்ப மிடப்பட்ட எழுத்திலான ஒழிப்பு அறிவித்தல் மூலம் அல்லது ஏதேனும் அடுத்துவரும், பெயர்குறித்து நிய மிப்பவரினால் செய்யப்பட்ட, பெயர்குறித்த நியமனத் தின் மூலம், ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண் டும்.

(4) நியமத்தர் தனது உண்மையான ஆளடையா ளம் பற்றி வங்கியை அல்லது நிறுவனத்தைத் திருப்திப் படுத்தினாலன்றி பணம், சான்றிதழ்கள் அல்லது அசை யும் ஆதனம் எதுவும், விடயத்திற்கேற்ப வங்கியினால் அல்லது நிறுவனத்தினால் எவரேனும் நியமத்தருக்கு

(5) இறந்த பெயர்குறித்து நியமித்த ஒருவரின் எவரேனும் நியமத்தருக்கு ஏதேனும் பணத்தை பங்குச் சான்றிதழை அல்லது வைப்புச் சான்றிதழை அல்லது வேறு அசையும் ஆதனத்தை கையளித்தல் அல்லது உரித்து மாற்றுதல், அத்தகைய பெயர்குறித்து நியமித்தவரின் வரவிலுள்ள அல்லது பெயரிலுள்ள அல்லது அத்தகைய காப்புறுதிப்பத்திரத்தின்கீழுள்ள பணம் அல்லது வேறு அசையும் ஆதனத்தின் தொடர்பில் வங்கி அல்லது நிறுவனத்துக்குள்ள கடப்பாடுகளின் முற்றான ஒரு விடுவிப்பாதல் வேண்டும்.

குறித்த சில விடயங்களில் வழக்கு எதுவும் பேணப்படற்பாலதல்ல.

545. மரணசாதனத்துடன் இறக்கும் ஆளொருவரின் விடயத்தில் மரணசாதன அதிகாரப்பத்திரத்தின் அளிப்பு வழங்கப்பட்டிருந்தாலன்றி அல்லது மரணசாதனமில்லாமல், இறக்கின்றவரும் ஐந்து இலட்சம் ரூபா அல்லது அதனை விஞ்சிய பெறுமதியுடைய மரணச்சொத்தொன்றை விட்டுச் செல்கின்றவருமான ஆளொருவரின் விடயத்தில் மரணச் சொத்து நிர்வாகப் பத்திரங்கள் அல்லது மரபுரிமையாண்மைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தாலன்றி, வழக்குத் தொடரப்படுவதற்கு முன்னர் அல்லது கைமாற்றம் பயனுறுத்தப்படுவதற்கு முன்னர் இருபது ஆண்டுகளுக்குள் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே மரணசாதனத்துடன் அல்லது மரணசாதனமில்லாமல் இறக்கின்ற எவரேனும் ஆளுக்குரிய அல்லது அவரின் மரணச் சொத்தில் அல்லது உடைமைகளில் உள்ளடங்கியுள்ளதான இலங்கையிலுள்ள அசைவுள்ள அல்லது அசைவற்ற –

(அ) ஏதேனும் ஆதனத்தை மீட்டுப்பெறுவதற்கு வழக்கு எதுவும் பேணப்படற்பாலதாகாது; அத்துடன்

(ஆ) ஏதேனும் ஆதனத்தின் கைமாற்றம் எதுவும் பயனுறுத்தப்படலாகாது.

வரையறுக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு மரணசாதனத் தத்துவக்காரர் நியமிக்கப்படுமிடத்து மரணசாதன அதிகாரப் பத்திரம்.

546. ஆளொருவர் பொதுவான விருப்பாவண மரணசாதனத் தத்துவக்காரராக அல்லாமல் விருப்பாவணத்தின் குறிப்பிட்டவொரு நோக்கத்திற்கு மட்டுமே மரணசாதனத்தத்துவகாரராக நியமிக்கப்படுமிடத்து மரணசாதன அதிகாரப்பத்திரம் அந்நோக்கத்திற்கு மட்டுமே வரையறுக்கப்பட்டதாக அவருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

புதிய அளிப்பு எப்பொழுது அனுமதிக்கப்படும் என்பது.

547. மரணசாதன அதிகாரப்பத்திரம் வழங்கப் பெற்றுள்ள தனியொரு மரணசாதனத்தத்துவக்காரர் அல்லது பின்வாழும் தனியொரு மரணசாதனத்தத்துவக்காரர் அல்லது நிருவாகப்பத்திரம் வழங்கப்பெற்

துள்ள தனியொரு மரணச் சொத்து நிருவாகி, இறந்தவரின் ஆதனத்தின் ஒரு பாகத்தை நிருவகிக்காது விட்டு வைத்து இறக்கின்றவிடத்து, முதலாவது அளிப்பொன்றுக்கென இதனகத்துமுன்னர் விதித்துரைக்கப்பட்ட விதிகளுக்கிணங்க நிருவகிக்கப்படாமல் விடப்பட்ட ஆதனம் தொடர்பில் நிருவாகப்பத்திரத்தின் புதிய அளிப்பொன்று செய்யப்படலாம்.

தவறுகளின் சீராக்கம்.

548. இறந்தவரின் பெயர்களினதும் விவரணங்களினதும் அல்லது அவரின் இறப்பின் நேரத்தையும் இடத்தையும் தருவதில் அல்லது வரையறுக்கப்பட்ட அளிப்பொன்றிலுள்ள நோக்கத்தில் உள்ள தவறுகள், நீதிமன்றத்தால் சீராக்கப்படலாம்; அத்துடன் அதற்கிணங்க மரணசாதன அதிகாரப்பத்திரத்தின் அல்லது மரணச்சொத்து நிருவாகப் பத்திரத்தின் அல்லது மரபுரிமையாண்மைச் சான்றிதழ்களின் அளிப்பு மாற்றவும் திருத்தவும்படலாம்.

மரணசாதனத் தத்துவக்காரர் களினதும் நிருவாகி களினதும் நட்டஈடு.

549. மரணசாதனத் தத்துவக்காரர்களாலும் மரணச் சொத்து நிருவாகிகளாலும் உறப்பட்ட சிரமத்தைத் தொடர்புறுத்தி குறிப்பிடப்பட்ட விடயம் ஒவ்வொன்றினதும் சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்ட பின்னர் நீதிமன்றம் தீர்மானிக்கின்றவாறு மரபுரிமையாளர்களால் விற்கப்படாத, ஆனால் வைத்திருக்கப்படும் சொத்துக்களின்மீதும் அதேபோல் அத்தகைய மரணசாதனத்தத்துவக்காரர்களாலும் மரணச்சொத்து நிருவாகிகளாலும் விற்கப்பட்ட ஆதனத்தின் மீதும் மூன்று சதவீதத்தை விஞ்சாத அத்தகைய வீதப்படியும், அத்துடன் மரணச்சொத்தில் காணப்படும் காசுமீதும் சிறப்பாக விருப்பாவணமெழுதப்பட்ட ஆதனத்தின்மீதும் ஒன்றரைச் சதவீதத்தை விஞ்சாத அத்தகைய வீதப்படியும் தரகு என்ற வகையில் அத்தகைய மரணசாதனத்தத்துவக்காரர்களுக்கும் மரணச் சொத்து நிருவாகிகளுக்கும் நட்டஈடு அனுமதிக்கப்படுதல் வேண்டும். எந்த விடயத்திலும், நீதிமன்றத்தின் அபிப்பிராயப்படி மேலும் ஊதியம் பெறுவதற்கு அவருக்கு உரித்தளிக்கக்கூடியவாறான அத்தகைய வழமைக்குமாறான சிரமம் அவர்மீது சுமத்தப்பட்டுள்ளதென நீதிமன்றத்திற்கு வெளிப்படையாக்கப்பட்டாலன்றி, மரணசாதனத்தத்துவக்காரர் அல்லது மரணச் சொத்து நிருவாகி எவருக்கும் ஐயாயிரம் ரூபாவைவிட பெரிய தொகையொன்று அனுமதிக்கப்படுதலாகாது.

மரணசாதனத் தத்துவக்காரர் பலருக்கு நட்டஈடு.

550. மூன்றுக்கு மேற்பட்டவர்கள் இருந்தாலன்றி தனியொரு மரணசாதனத்தத்துவக்காருக்கு அல்லது மரணச் சொத்து நிருவாகிக்கு சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட முழு நட்டஈட்டிற்கும் மரணசாதனத்தத்

வக்காரர் அல்லது மரணச் சொத்து திருவாகி ஒவ்வொருவரும் உரித்துடையவராதல் வேண்டும். மூன்றுக்கு மேட்பட்டவர்கள் இருக்கும் விடயத்தில் மூன்று பேர் எந்த நட்டஈட்டிற்கு உரித்துடையவரோ அந்த நட்டஈடு முறையே அவர்களால் புரியப்பட்ட சேவைகளுக்கிணங்க அவர்கள் எல்லோருக்குமிடையே பங்கிடப்படுதல் வேண்டும் என்பதுடன், ஒன்றுக்கு மேற்பட்ட மரணசாதனத் தத்துவக்காரர் அல்லது மரணச் சொத்து திருவாகி இருக்கவேண்டியதான எல்லா விடயங்களிலும் அதேபோன்ற பங்கிடொன்று செய்யப்படுதல் வேண்டும். ஆனல் விருப்பாவணம், மரணசாதனத் தத்துவக்காரர் அல்லது மரணச் சொத்து திருவாகி ஒருவருக்கு குறிப்பிட்டவொரு நட்டஈட்டை ஏற்பாடு செய்யுமிடத்து, அவர் குறிப்பிட்ட நட்டஈட்டில் எழுத்திலான கைதுறப்பொன்றை நீதிமன்றத்தில் கோப்பிட்டாலன்றி, அவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டதைத் தவிர வேறு ஏதேனும் படித்தொகைக்கு அவர் உரித்துடையவராதலாகாது.

**கணக்குகளைக் கோப்பிலிடுதல்.**

551. ஒவ்வொரு மரணசாதனத் தத்துவக்காரரும் மரணச் சொத்து திருவாகியும் மரணசாதன அதிகாரப் பத்திரம் அல்லது மரணச்சொத்து திருவாகப்பத்திரத்தின் அளிப்பு அவருக்கு வழங்கப்பட்ட தேதியிலிருந்து பன்னிரண்டு மாதங்கள் முடிவடைவதன்மீது அல்லது அதற்குமுன், அல்லது நீதிமன்றம் அனுமதிக்கக்கூடியவாறான அத்தகைய மேலதிக காலத்திற்குள் விடயத்திற்கேற்ப அவரது மரணசாதனத்தத்துவத்தின் அல்லது மரணச்சொத்து திருவாகத்தின் உண்மையான இறுதிக்கணக்கொன்றை சத்தியத்தின்மீது அல்லது உறுதிப்பாட்டின்மீது உறுதிசெய்து எல்லாப் பற்றுச்சீட்டுக்களையும் உறுதிச்சீட்டுக்களையும் இணைத்து மாவட்ட நீதிமன்றத்தில் கோப்பிலிடுதல் வேண்டும் என்பதுடன் அதேநேரத்தில் எந்த மரணச்சொத்தின் திருவாகத்திற்கு எவரேனும் பராயமடையாதவர் அல்லது பராயமடையாதவர்கள் உரித்துடையவர் அல்லது உரித்துடையவர்களாகக்கூடுமோ அந்த மரணச்சொத்தின் திருவாகத்தின் பொழுது அவரது கைக்கு வந்திருக்கக்கூடியவாறான ஏதேனும் பணத்தையும் நீதிமன்றத்திற்குச் செலுத்தலாம் :

ஆயினும், இறந்தவர்கள் சம்மதிக்குமிடத்து, அத்தகைய கணக்கு கோப்பிடப்படுவதன்மீது வேறுவகையாக செலுத்தப்படற்பாலதாக இருந்திருக்கக்கூடியதான முத்திரைத்தீர்வையின் கொடுப்பனவின்பேரில் அத்தகைய கணக்கு கோப்பிலிடப்படுவதையும் கொடுப்பனவையும் தவிர்த்துக்கொள்ளலாமென்பதுடன், அதன்மேல் வழக்கு நடவடிக்கைகள் மூடப்படுதலும் வேண்டும்.

மரணசாதனத் தத்துவக்காரர் அல்லது மரணச் சொத்து நிருவாகி ஓராண்டிற்குள் மரணச் சொத்தை நிருவகிக்கத் தவறுதல்.

552. மரணசாதனத் தத்துவக்காரர் அல்லது மரணச் சொத்து நிருவாகி எவரும் மரணசாதன அதிகாரப்பத்திரம் அல்லது மரணச் சொத்து நிருவாகப் பத்திரம் வழங்கப்பட்ட ஓராண்டிற்குள் கடன்தருநர்களுக்கு மரபுரிமையாளர்களுக்கு, மரணசாதனப் பொருள் பெறுநர்களுக்கு அல்லது வேறு ஆட்களுக்கு அவர்கள் முறையே எந்தப் பணத்தொகைகளுக்கு உரித்துடையவர்களாகின்றார்களோ அந்தப் பணத் தொகைகளைச் செலுத்தத் தவறுவாராயின் அத்தகைய மரணசாதனத் தத்துவக்காரர் அல்லது மரணச் சொத்து நிருவாகி அக்காலப்பகுதியின்பின்னர் அவர் தம்வசம் பிடித்து வைத்திருக்கும் எல்லாப் பணத் தொகைகளுக்கும் அவ்வாறு வைத்திருப்பதற்கான போதிய நியாயமான காரணத்தை அவர் காண்பித்தாலன்றி, அவரது சொந்த நிதியிலிருந்து வட்டி செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

தவறுகள்.

553. (1) விருப்பாவணமொன்றிருப்பதை வேண்டுமென்றே மறைக்கின்ற அல்லது மனதறிய 516ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனும் ஆள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் விருப்பாவணத்தினால் கையாளப்படும் மரணச்சொத்தின் பெறுமதிக்கும் சமமான குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) பிரிவு 524 அல்லது 528 என்பதன் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்தில் வேண்டுமென்றே—

(அ) இறந்தவருக்கு எவரேனும் மரபுரிமையாளர்கள் உள்ளனர் என்பதனை வெளிப்படுத்தத் தவறுகின்ற; அல்லது

(ஆ) இறந்தவரின் எவரேனும் மரபுரிமையாளர் தொடர்பில் பொய்யான கூற்றொன்றைச் செய்கின்ற; அல்லது

(இ) இறந்தவரின் ஆதனம், கடன்தருநர்கள் அல்லது கடனாளிகள் தொடர்பில் பொய்யான கூற்றொன்றைச் செய்கின்ற; அல்லது

(ஈ) தரப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பில் பொய்யான வேறு ஏதேனும் கூற்றைச் செய்கின்ற,

ஆளெவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், விடயத்திற்கேற்ப மரபுரிமையாளர்களை அல்லது வெளிவிடப்பட்டிராத மரபுரிமையாளர்களை வந்துறும் பங்கின் அல்லது பங்குகளின்

பெறுமதிக்குச் சமமான அல்லது பொய்யான கூற்றுச் செய்யப்படுவது தொடர்பிலான ஆதனத்தின் பெறு மதிக்குச் சமமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

நிலைமாறுகால ஏற்பாடுகள்.

554. (1) ஆளொருவர் இந்த அத்தியாயம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னர் இலங்கையில் விருப்பாவணமொன்றை விட்டுச் செல்லாமல் இறந்துள்ளவிடத்தும் அத்துடன் அத்தகைய ஆளின் மரணச்சொத்து தொடர்பில் மரணசாதன வழக்கு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருக்காதவிடத்தும் இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகள் அத்தகைய மரணச் சொத்தின் நிருவாகத்திற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) இந்த அத்தியாயம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னர் ஐந்து இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய மரணச்சொத்து தொடர்பில் விருப்பாவணமொன்றின் மரணசாதன தத்துவப்பத்திரத்தை வழங்குவதற்கென அல்லது மரணச்சொத்து நிருவாகப் பத்திரம் வழங்கப்படுவதற்கென ஏதேனும் மாவட்ட நீதிமன்றத்தில் விண்ணப்பமொன்று செய்யப்பட்டுள்ளவிடத்தும் அத்துடன் பின்னுறுதிக் கட்டளையொன்று ஆக்கப்படாதவிடத்தும் அத்தகைய விண்ணப்பமானது, விடயத்திற்கேற்ப, 524 ஆம் பிரிவின்கீழ் அல்லது 528 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க விசாரிக்கப்பட்டுத் தீர்க்கப்படுதலும் வேண்டும்.

(3) இந்த அத்தியாயம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னர் ஐந்து இலட்சம் ரூபாவுக்குக் குறைவான பெறுமதியுள்ள மரணச்சொத்து ஒன்றின் தொடர்பில் மரணச்சொத்து நிருவாகப் பத்திரம் வழங்கப்படுவதற்கென ஏதேனும் மாவட்ட நீதிமன்றத்தில் விண்ணப்பமொன்று செய்யப்பட்டுள்ளவிடத்தும் அத்துடன் பின்னுறுதிக்கட்டளையொன்று ஆக்கப்படாதவிடத்தும், அத்தகைய விண்ணப்பமானது, இச்சட்டம் நடைமுறைக்கு வருவதன்மீது முடிவுறுத்தப்படுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், இறந்த அத்தகைய ஆளின் மரணச்சொத்து நிருவகிக்கப்படுவதில் அக்கறையுள்ள எவரேனும் ஆளுக்கு அல்லது இறந்த அத்தகைய ஆளின் எவரேனும் மரபுரிமையாளர் அத்தகைய மரணச்சொத்து தொடர்பில் மரபுரித்தாண்மைச் சான்றுப் பத்திரம் பெற்றுக்கொள்வதில் அக்கறை கொண்டுள்ளவிடத்து, விடயத்திற்கேற்ப மரணச்சொத்து நிருவாகப்

பத்திரத்தை அல்லது மரபுரித்தாண்மைச் சான்றுப் பத்திரத்தை வழங்குதல் அவசியமென அல்லது வசதி யானதென நீதிமன்றத்திற்குத் தோன்றினுல், நீதிமன்ற மானது, அதன் தற்றுணிபின் பேரில் அத்தகைய வழக்குத் தொடர்ந்துறுவதை அனுமதிக்கலாம்.

பொருள் கோடல்.

554அ. (1) இந்த அதிகாரத்தில் "மரணசாதன அதி காரப்பத்திர அலுவலர்" என்பது, மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் என்று பொருள்படும் என்பதுடன், மரண சாதன வழக்கு நடவடிக்கைளில் மரணசாதன அதி காரப்பத்திர அலுவலர் ஒருவரின் தத்துவங்களைப் பிர யோகிப்பதற்கும் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் என நீதிமன்றத்தால் பொதுவாக அல்லது சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலரை யும் உள்ளடக்கும்.

(2) இந்த அத்தியாயத்தின்கீழ் வழக்கு நடவடிக் கைகளின் நோக்கங்களுக்காக இறந்த எவரேனும் ஆளின் "மரணச்சொத்து" அத்துடன் "ஆதனம்" என் பது பின்வருவனவற்றை உள்ளடக்காது எனக் கருதப் படுதல் வேண்டும்—

(அ) அத்தகையவரான இறந்தவரின் இறப்பின் நேரத்தில் ஏதேனும் வங்கியில் அவரது வரவி லிருக்கும் ஏதேனும் பணம் அல்லது வேறு அசைவுள்ள ஆதனம்; அத்துடன்

(ஆ) ஏதேனும் நிறுவனத்தால் வழங்கப்பட்ட ஏதேனும் பங்குச் சான்றிதழ்களால் அல்லது வைப்புச் சான்றிதழ்களால் எடுத்துக்காட் டப்படுவனவும் அவரது இறப்பின் நேரத்தில் அத்தகையவரான இறந்தவரின் பெயரில் எஞ் சியிருப்பனவுமான பணங்கள்;

அவர் அவை தொடர்பில் 544 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பெயர்குறித்து நியமனம் செய்திருந் தால்; அத்துடன்

(இ) அதன் தொடர்பில் 544 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பெயர்குறித்த நியமனம் எது வும் செய்யப்பட்டிருப்பினும் சரி, அல்லாவிடி னுஞ்சரி, இறந்தவரால் செய்து கொள்ளப் பட்டதும் அவரது இறப்பின் தேதியன்று நிலவுகின்றதுமான காப்புறுதி ஒப்பந்தமொன் றின்கீழ், செலுத்தப்படற்பாலதான பணங் கள்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 554ல என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 554ல என்னும் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "538 ஆம் பிரிவால் தேவைப் படுத்தப்பட்ட" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "539 ஆம் பிரிவால் தேவைப்படுத்தப்பட்ட" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "553 ஆம் பிரிவால் தேவைப் படுத்தப்பட்ட" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "551 ஆம் பிரிவால் தேவைப்படுத்தப்பட்ட" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 724அ என்னும் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "553 ஆம் பிரிவால் விதித்துரைக்கப்பட்ட" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "551 ஆம் பிரிவால் விதித்துரைக்கப்பட்ட" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகிறது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 724அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையானது அதிலிருந்து இல. 81, 82, 83, 84, 84அ, 84ஆ, 85, 86, 87, 88, 89, 90, 91, 92, 93 என்னும் படிவங்களை விட்டுவிட்டு, அவற்றிற்குப் பதிலாக பின்வரும் படிவங்களை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.

"இல. 81 (பிரிவு 516)

**விருப்பாவணத்துடன் முன்வைக்கப்படவேண்டிய சத்தியக் கடுதாசியின் படிவம்**

(75 ஆம் இலக்கத்தில் உள்ளவாறு முறைசார்ந்த பாகங்கள்)

1. ...................... என்ற இடத்தில் 19 ஆம் ஆண்டு ......... மாதம் ............ ஆம் தேதியன்று இறந்தவரான ...................... என்ற இடத்தைச் சேர்ந்த அ, ஆ என்பவரை நான் நன்கறிந்திருந்தேன்.

2. சொல்லப்பட்ட அ, ஆ என்பவர் 19...... ஆம் ஆண்டு.............. மாதம் ......... ஆம் தேதியிடப்பட்ட அவரது இறுதி விருப்பாவணத்தை முறையாக எழுதி நிறைவேற்றினர்.

3. சொல்லப்பட்ட அ, ஆ என்பவர் சொல்லப்பட்ட அவரது விருப்பாவணத்தை எனது கட்டுக்காப்பில் வைத்தார் (அல்லது விடயம் அவ்வாறெனில் உறுதிப்படுத்துநர் விருப்பாவணத்தை எந்தச் சூழ்நிலையில் கண்டெடுத்தாரோ அந்தச் சூழ்நிலையைக் குறிப்பிடவும்).

4. சொல்லப்பட்ட மரணசாதனகாரர், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள இயல்பினதும் பெறுமதியுடையதுமான ஆதனத்தை இந்த (அல்லது விடயத்திற்கேற்ப வேறு ஏதேனும்) நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்குள் விட்டுச் சென்றுள்ளார். (அல்லது இலங்கையில் ஆதனம் எதனையும் விட்டுச் செல்லவில்லை

5. சொல்லப்பட்ட விருப்பாவணத்தை நான் முன்வைக்கின்றேன்.

(முறைசார்ந்த முடிபு)

(அட்டவணை)

இல. 82

(பிரிவு 517/524)

மரணசாதன அதிகாரத்திற்கான அல்லது விருப்பாவணம் இணைக்கப்பட்ட மரணச் சொத்து நிருவாகத்திற்கான விண்ணப்பப் படிவம்

இறந்தவரான அ, ஆ என்பவரின் விருப்பாவணம் சம்பந்தப்பட்ட வழக்கில் .................... என்ற இடத்தைச் சேர்ந்த இ, ஈ மனுதார்

எதிராக

(எதிர்வாதிக்கு, விண்ணப்பத்தை எதிர்க்கும் சாத்தியமுள்ள அல்லது தகுதி வாய்ந்த எவரேனும் ஆளின் பெயர் குறிப்பிடுக)

(65 ஆம் இலக்கத்திலுள்ளவாறு முறைசார்ந்த பகுதிகள்)

1. .................................. என்ற இடத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவரான அ, ஆ என்பவர் 19...... ஆம் ஆண்டு .............. மாதம்...... ஆம் திகதி இறந்தார்.

2. சொல்லப்பட்ட அ, ஆ, என்பவர் 19.. ...... ஆம் ஆண்டு ................. மாதம் ...... ஆம் தேதியிடப்பட்ட அவரது இறுதி விருப்பாவணத்தை முறையாக எழுதி நிறைவேற்றினர்.

(இப்பொழுது இந்நீதிமன்றத்தில் வைப்பிலிடப்பட்டுள்ளது அல்லது அத்துடன் சொல்லப்பட்ட விருப்பாவணம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது, அல்லது விடயத்திற்கேற்ப ................. 524 ஆம் பிரிவைப் பார்க்கவும்)

3. தங்களது மனுதாரரின் அறிவுக்கெட்டியவரை சொல்லப்பட்ட காலஞ்சென்றவரான அ, ஆ என்பவரின் மரபுரிமையாளர்கள்:—

4. தங்களது மனுதாரர் அதனை நிச்சயப்படுத்திக்கொள்ள இயலுமான அளவுக்கு இறந்தவரின் ஆதனத்தின் முழுமையானவையும், உண்மையானவையுமான விபரங்கள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் அடங்கி உள்ளன.

5. தங்களது மனுதாரர் (விடயத்திற்கேற்ப மரணசாதனத் தத்துவக்காரர் கடன் தருநர் முதலியன) என்ற வகையில் உரிமை கோருகிறார்.

ஆதலால் தங்களது மனுதாரர், சொல்லப்பட்ட விருப்பாவணம் எண்பிக்கப்பட்டது எனவும் அத்துடன், அவரே சொல்லப்பட்ட விருப்பாவணத்தின் மரணசாதனத் தத்துவக்காரர் என வெளிப்படுத்தப்படலாம் எனவும், அத்துடன் அதற்கிணங்க அதன் மரணசாதன அதிகாரப் பத்திரம் அவருக்கு வழங்கப்படலாம் எனவும் வெளிப்படுத்தும் (அல்லது விடயம் அவ்வாறெனில், விருப்பாவணத்தின் பிரதி இணைக்கப்பட்ட மரணச்சொத்து நிருவாகப் பத்திரத்தின் அளிப்பொன்று, முதலியனவற்றுக்கு) கட்டளையொன்றைத் தாழ்மையுடன் வேண்டுகிறார்.

(வரையறுக்கப்பட்ட அளிப்பொன்று கேட்கப்படின் அதனைக் குறிப்பிடவும்)

(முறைசார்ந்த முடிபு)

(அட்டவணை)

(சத்தியக் கடுதாசி மூலம் அல்லது வாய்மொழிச்சான்று மூலம் 2 ஆம் 5 ஆம் பந்திகளுக்கு ஆதாரம் காட்டவும். எதிர்வாதியின் பெயர் குறிப்பிடப்படாத விடத்து எதிர்ப்பு எதுவும் எதிர்பார்க்கப்படவில்லை என்ற காரணத்தைக் குறிப்பிடவும். அத்துடன் சத்தியக் கடுதாசி கொண்டு ஆதாரப்படுத்தவும் மரண

சாதனக்காரர் இலங்கைக்கு வெளியே இறந்தால் தனி மரணசாதன' நியாயா திக்கம் இருப்பதாக நீதிமன்றத்தை நியமிக்கும் கட்டளையொன்றை மனுதாரர் பெற்றிருப்பதாகக் குறிப்பிடவும்.)

இல. 83

(பிரிவு 526/528)

விருப்பாவணம் இல்லாதவிடத்து நிருவாகத்திற்கான
அல்லது மரபுரிமையாண்மைச் சான்றிதழுக்கான
விண்ணப்பத்தின் படிவம்.

(முறைசார்ந்த பாகங்கள்)

(கடைசிப் படிவத்தைப் போலவே தொடரவும், 2 ஆம் பந்திக்குப் பதிலாக விருப்பாவணத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை அல்லது அப்படியெதுவும் இல்லை என்ற கூற்றொன்றைப் பதிலீடு செய்யவும்)

ஆதலால், தங்களது மனுதாரர் சொல்லப்பட்ட மரண சாதனமில்லாது இறந்த வரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்கு (கடன் தருநர் அல்லது விடயத்திற் கேற்ப உள்ளவாறு) என்றவாறு உரித்துடையவர் என்பதனை வெளிப்படுத்துவ தும் அத்துடன் சொல்லப்பட்ட மரணச் சொத்தின் நிருவாகப்பத்திரம் அல்லது அதற்கான மரபுரிமையாண்மைச் சான்றிதழ் அதற்கிணங்க அவருக்கு வழங்கப் படவேண்டும் எனப் பணிப்பதுமான கட்டளையொன்றைத் தாழ்மையுடன் வேண்டுகின்றார்.

(வரையறுக்கப்பட்ட அளிப்பொன்று கேட்கப்படின் அதனைக் குறிப்பிடவும்)

(முறைசார்ந்த முடிபு)

இல. 84

(பிரிவு 529 (3))

மரணசாதன அதிகாரப்பத்திர அலுவலரால் வெளியிடப்பட
வேண்டிய அறிவித்தலின் படிவம்

...........மாவட்ட நீதிமன்றத்தில்

குடியியல் நடவடிக்கை முறை சட்டக்கோவையின் ......... ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்.

இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட இறந்தவரான ஆளின் மரணச் சொத்து தொடர்பில் விருப்பாவணத்தை எண்பிப்பதற்கான/மரணசாதன அதி காரப் பத்திரத்துக்கான/மரணசாதன நிருவாகத் பத்திரத்தின் அளிப்புக் கான/மரபுரிமையாண்மைச் சான்றிதழ்களின் வழங்குகைக்கான பின்வரும் விண்ணப்பங்கள் செய்யப்பட்டுள்ளன என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. ஒரு விருப்பாவணம் எண்பிக்கப்பட்டதென வெளிப்படுத்தி அல்லது இதற்கான 1ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்ட ஆட்களுக்கு மரணசாதன அதிகாரப்பத் திரத்தின் அல்லது விருப்பாவணமொன்று இணைக்கப்பட்டோ இணைக்கப்படா மலோ மரணசாதன நிருவாகப் பத்திரத்தின் அளிப்பிற்கென மரபுரிமையாண் மைச் சான்றிதழொன்றின் வழங்கலுக்கென கட்டளையொன்று ஆக்கப்படு வதற்கு ஆட்சேபனையுடைய ஆளெவரும், 19...... ஆம் ஆண்டு ............ மாதம் ...... தேதிக்கு முன்னர் (சத்தியக் கடதாசியின் ஆதாரத்துடன்) அத் தகைய ஆட்சேபனையை எழுத்தில் கோப்பிடுமாறு தேவைப்படுத்தப்படுகின்றார்.

அட்டவணை

| நிரை I | நிரை II | நிரை III | நிரை IV | நிரை V | நிரை VI |
|---|---|---|---|---|---|
| மாவட்ட நீதிமன்றம் பதிவு இல. | இறந்தவரின் பெயர் | இறந்தவர் விருப்பாவணம் விட்டுச் சென்றுரா | விண்ணப்பகாரரின் பெயரும் முகவரியும் | பயனுகரிகளின் அல்லது மரபுரிமையாளர்களின் பெயர்களும் இறந்தவருக்கு அவர் கொண்ட உறவு முறையும் | சம்மதமளிக்கும் மரபுரிமையாளர்கள் |
| | | | | | |

ஒப்பம்/மரணசாதன அதிகாரப்பத்திர
அலுவலர்

திகதி :

...................................மாவட்ட நீதிமன்றம்

இல. 85

(பிரிவு 531)

விருப்பாவணம் எண்பிக்கப்பட்டதென வெளிப்படுத்தும்

கட்டளையின் படிவம்

இவ்வழக்கு இறுதித் தீர்மானத்திற்கென ........... ஆம் தேதியன்று ........... முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. (........... என்பவரின் சத்தியக்கடதாசிகள் வாசிக்கப்பட்டு அத்துடன் ........... என்பவரின் சாட்சியம் எடுத்துக் கொள்ளப்பட்டு) (எல்லாக் கட்சிக்காரர்களினதும் தம்பக்க வழக்கு கேட்கப் பட்டு) ........... என்பவரின் விருப்பாவணத்தின் மரணசாதன அதிகாரப்பத்திரம் ........... என்பவருக்கு (அல்லது விடயத்திற்கேற்ப) வழங்கப்படவேண்டுமென்று 19...... ஆம் ஆண்டு ........... மாதம் ...... தேதியன்று இந்நீதிமன்றத்தினல் கட்டளையிடப்படுகின்றது. (அத்துடன் ........... (எதிர்வாதி) அதற்கான தமது உரிமையை நிலைநாட்டியிருப்பதாக இந்நீதிமன்றத்திற்குத் தோன்றுவதால் அதற்கிணங்க விடயத்திற்கேற்ப (மரண சாதன அதிகாரப்பத்திரம், நிருவாகப் பத்திரம், மரபுரிமையாண்மைச் சான்றிதழ் சொல்லப்பட்ட ........... என்பவருக்கு வழங்கப்பட வேண்டுமென மேலும் கட்டளையிடப்படுகின்றது.)

(ஒப்பமிடப்பட்டது)

(அளிப்பு வரையறுக்கப்படுமிடத்து அந்நிகழ்வையும், எந்தளவுக்கு வரையறுக் கப்படும் என்பதையும் குறிப்பிடுக).

இல. 86

(பிரிவு 531, 53‡)

மரண சாதன அதிகாரப் பத்திரத்தின் படிவம்

(தலைப்பு)

.............. மாவட்ட நீதிமன்றத்தில்

இத்தால் சகலரும் அறிக 19...... ஆம் ஆண்டு............ மாதம்......... ஆம் நாளன்று இறந்தவரான .........என்பவரின் இறுதி விருப்பாவணமும் மரணசாதனமும் இந்நீதிமன்றத்தின் முன்னிலையில் வாசிக்கப்பட்டு என்பிக்கப்பட்டதுடன் இத்துடன் இணைக்கப்பட்ட அதன் பிரதியொன்று காட்சிக்கும் வைக்கப்பட்டது. இறந்தவரின் எல்லா ஆதனத்தினதும் மரணச் சொத்தினதும் உரிமைகளினதும் வரவுகளினதும் நிருவாகம் சொல்லப்பட்ட இறுதி விருப்பாவணத்திலும் மரணசாதனத்திலும் பெயர் குறிப்பிடப்பட்ட மரணசாதனத் தத்துவக்காரருக்கு (பெயரும் பதவிப்பெயரும்) பயன்படுத்தப்பட்டது என்பதுடன் இத்தால் பாரப்படுத்தவும்படுகிறது; ஆதனம் அனுமதிக்குமளவுக்கும் சட்டம் பிணிக்குமளவுக்கும், இறந்தவரான மரணசாதனகாரரின் கடன்களையும் விருப்பாவணப் பொருள்களையும் செலுத்துவதன்மூலம், சொல்லப்பட்ட விருப்பாவணத்தை விசுவாசத்துடன் நிறைவேற்றுவதற்கும் 19...... ஆம் ஆண்டு ............ மாதம் ...... ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் சொல்லப்பட்ட ஆதனத்தின் உண்மையான, முழுமையான குறைவற்ற பொருட்பட்டியலொன்றை இந்நீதிமன்றத்திற்குக் காண்பிக்கவும் 19...... ஆம் ஆண்டு ............ மாதம் ...... ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ............ மரணசாதனத் தத்துவத்தின் உண்மையான நியாயமான கணக்கொன்றை இணைப்பதற்கும் சொல்லப்பட்ட ............ முதலாவதாக சத்தியப்பிரமாணம்செய்யப்படுகின்றார் (அல்லது உறுதிப்படுத்தப்படுகின்றார்).

19...... ஆம் ஆண்டு ............ மாதம்......... ஆம் நாளாகிய இன்று எனது கைப்படவும் நீதிமன்றத்தின் இலச்சினையுடனும் வழங்கப்படுகின்றது.

(ஒப்பம்) ............
மாவட்ட நீதிபதி.

(மரணசாசன அதிகாரப்பத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளவிடத்து வரையறையை உட்புகுத்தவும்)

இல. 87

(பிரிவு 531/534)

நிருவாகத் தத்துவப்பத்திர படிவம்

(மரணசாதனம் இணைக்கப்பட்டதும் அல்லாததும்)

............மாவட்ட நீதிமன்றத்தில்

பெறுநர் (விடயத்திற்கேற்ப விதவைக்கு, தாரமிழந்தவருக்கு, கிட்டிய உறவினருக்கு, நீதிமன்றச் செயலாளருக்கு, கடன் கொடுத்தவர் முதலியோருக்கு).

இறந்துபோனவராகிய ............ என்ற இடத்தைச் சேர்ந்த ............ என்பவர், மரணசாதனம் ஒன்றை எழுதிவைத்துவிட்டு அண்மையில் இவ்வுலக வாழ்வை நீத்துள்ளாராதலாலும் அந்த மரணசாதனம் இந்த நீதிமன்றத்தில் முறைப்படி என்பிக்கப்பட்டுள்ளதாதலாலும் (மரணசாதனத்தின் பிரதி ஒன்று இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது) அந்த மரணசாதனத்தில் நிறைவேற்றுநராக எவரது பெயரும் குறிப்பிடப்படவில்லையாதலாலும் அல்லது மரணசாதனம் எதையும் எழுதிவைக்காமல் இவ்வுலக வாழ்வை நீத்துள்ளாராதலால்,

சொல்லப்பட்ட இறந்துபோனவரின் ஆதனங்களையும் மரணச்சொத்துக்களை யும் உரிமைகளையும் வருமதிகளையும் நிருவாகஞ்செய்வதற்கும், நம்பிக்கைக் குரிய முறையில் அவற்றை கையுதிர்ப்பதற்கும், அவரது மரணச்சொத்துக்கு வருமதியாக இருக்கக்கூடிய எத்தகைய கடன்களையும் தரும்படி கோருவதற் கும் அறவிடுவதற்கும், அத்தகைய ஆதனங்களும் மரணச்சொத்துக்களும் உரிமைகளும் வருமதிகளும் இடந்தருகின்றவரைக்கும், சொல்லப்பட்ட இறந்து போனவரால் கொடுபடவேண்டியிருந்த எத்தகையனவான கடன்களையும் (சொல்லப்பட்ட மரணசாதனத்தில் அடங்கியிருக்கும் மரணசாதனப் பொருள் கள் உட்பட) செலுத்துவதற்கும் என நீர் இந்த ஆவணத்தின் மூலம் தத்துவ மளிக்கப்பட்டு அதிகாரமளிக்கப்படுகின்றீர்; மேற்படி ஆதனம் முதலியவற்றை நன்றாகவும் நம்பிக்கைக்குரியவகையிலும் நிருவாகம் செய்வதற்கும், சொல்லப் பட்ட ஆதனம், மரணச்சொத்து, உரிமைகள், வருமதிகள் ஆகியன எல்லாமும் பற்றிய உண்மையும் நிறைவும்கொண்ட ஆதனப்பட்டியல் ஒன்றை இந்த நீதி மன்றத்தின் முன்னிலையில் 19...... ஆம் ஆண்டு ........... மாதம் ..... ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் காண்பிப்பதற்கும், அத்துடன் அவற்றை நீர் நிருவாகஞ் செய்த முறை பற்றிய உண்மையானதும் நியாய மானதுமான கணக்கு ஒன்றை 19...... ஆம் ஆண்டு ........... மாதம் ..... ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிப்பதற்கும், நீர் ஏலவே சத்தியஞ் செய்திருக்கின்றீர்/உறுதியுரை கூறியிருக்கின்றீர். ஆகவே நீர் இந்த ஆவணத் தின் மூலம், சொல்லப்பட்ட இறந்துபோனவரின் எல்லா ஆதனங்களினதும், மரணச்சொத்துக்களினதும், உரிமைகளினதும், வருமதிகளினதும் நிருவாகி யாக (இதனோடு மரணசாதனத்தின் பிரதி ஒன்று இணைக்கப்பட்டுள்ளது) இத் தால் அதிகாரமளிக்கப்பட்டு நியமிக்கப்படுகின்றீர். (இருப்பினும் மரணச் சொத்தின் அசைவற்ற ஆதனம் எதனையும் விற்கலாம் என்று நீதிமன்றம் உமக் குச் சிறப்பாக அதிகாரம் வழங்கினாலொழிய மரணச்சொத்தின் அசைவற்ற ஆதனம் எதையும் நீர் விற்கக்கூடாது என்று இத்தால் தடைசெய்யப்படுகின் றீர்.)

(ஒப்பம் முதலியன) ..... .....

இல. 87அ

(பிரிவு 531)

மரபுரிமைச் சான்றிதழ்

...........மாவட்ட நீதிமன்றத்தில்

1. ......... என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற ......... என்பவர், ........ (நியாயாதிக்கத்துள் ஆதனத்தை விட்டுவிட்டு இறந்துபோயுள்ளாரென்பது இந்த நீதிமன்றத்துக்கு உண்மைப்படுத்தப்பட்டுள்ளதாதலால் :

2. இறுதிவிருப்பாவணம் ஒன்றினை விட்டுவைக்காது 19......மாதம்......ஆம் நாளன்று இறந்துபோனவரான காலஞ்சென்ற ........... என்பவரின் மரபுரிமை யாளர்களாய் இருத்தல் வேண்டுமென உறுதியாய் உரைக்கப்பட்டவர்களான பின்வருவோருக்கு மரபுரிமைச் சான்றிதழ்கள் வழங்கப்படுதல் வேண்டுமென ........... என்பவரால் 19...... மாதம் ...... ஆம் தேதியிடப்பட்ட மனுமூலம் விண்ணப்பிக்கப்பட்டது.

1. ........... என்னுமிடத்தைச் சேர்ந்த ........... (இறந்தவருடனான உறவுமுறையும் உடன்பட்டுக் கொள்ளப்படின் பங்கும்)

2. என்னுமிடத்தைச் சேர்ந்த ........... (இறந்தவருடனான உறவு முறையும் உடன்பட்டுக் கொள்ளப்படின் பங்கும்)

3. ........... என்னுமிடத்தைச் சேர்ந்த ........... (இறந்தவருடனுன உறவு முறையும் உடன்பட்டுக்கொள்ளப்படின் பங்கும்)

3. மேற்சொன்ன மரபுரிமையாளர்கட்கு மரபுரிமைச் சான்றிதழ்கள் வழங்கப் படுதலுக்கு எதிராக, 19...... ...........மாதம் ......ஆம் நாளன்றும், 19...... ...........மாதம் ......ஆம் நாளன்றும் பத்திரிகையில் (பத்திரிகையின் பெயர்) வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம் எதிர்ப்புகள் கோரப்பட்டன.

4. மேற்சொன்ன மரபுரிமையாளர்கட்கு சான்றிதழ்கள் வழங்கப்படுதலுக்கு எதிராக எதிர்ப்புகள் எதும் கோப்பிடப்படவில்லே.

5. ஆகவே, 531 பிரிவின் நியதிகளின்படி இந்த மரபுரிமைச் சான்றிதழ் இப் போது உங்களுக்கு வழங்கப்படுகிறது.

(ஒப்பம்/மாவட்ட நீதிபதி)

இல. 88

(பிரிவு 539 (1)

முற்போந்த இரண்டு படிவங்களிலும் குறிப்பிடு செய்யப்பட்ட நிறைவேற்றுநரால் அல்லது நிருவாகியால் செய்யப்படவேண்டிய

சத்தியத்தின் படிவம்

இப்போது உம்முன் காண்பிக்கப்படும், ........... என்ற தேதியைக் கொண்டதும், ........... எனக் குறிப்பீடு செய்யப்பட்டதும் ஆன எழுத்தாவணமானது, இறந்துபோனவரது மரண சாதனமாகிய சொத்துறுதி என நீர் நம்புகிறீர் என்று, நீர் சத்தியஞ் செய்கிறீர்/உறுதிப்படுத்துகிறீர். அது அவ்வாறுயின், அதன் கண்ணே பெயர் குறிப்பிடப்பட்ட நிறைவேற்றுநர் நீர்தான் ஆவீர். இறந்துபோனவரது ஆவனம் இடந்தருகின்றவரைக்கும், சட்டம் பிணிக்கின்றவரைக்கும், இறந்துபோனவரது கடன்களேயும் (மரண சாதனப் பொருள்களேயும்) கொடுத்துத் தீர்ப்பதன் மூலமும் ..............மரணச் சொத்துக்குச் சேர வேண்டிய எத்தகையனவுமான கடன்களேயும் கோருவதன் மூலமும், அறவிடுவதன் மூலமும் சொல்லப்பட்ட மரண சாதனத்தை நம்பிக்கைக்குரிய முறையில் நிறைவேற்றுவீர் என்றும் (அல்லது, இறந்து போனவராகிய ...................... என்பவரது ஆதனத்தையும் மரணச்சொத்தையும் உரிமைகளேயும் வருமதிகளேயும் நிருவாகஞ் செய்து நம்பிக்கைக்குரிய முறையில் கையுதிர்ப்பீர் என்றும்! உண்மையும், முழுமையும், நிறைவும் கொண்ட இறந்துபோனவரது அசைவுள்ளவும் அசைவற்றவையுமான எல்லா ஆதனங்களும் உரிமைகளும் வருமதிகளும் பற்றிய ஆதனப்பட்டியல் ஒன்றை 19...... ஆம் ஆண்டு ...........மாதம் ......ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் இந்த நீதிமன்றத்தின்முன்னர் வெளிக்காட்டி வைப்பீர் என்றும், அதனை நீர் எவ்வாறு நிறைவேற்றினீர் (அல்லது, நிருவாகஞ் செய்தீர்) என்பதைப் பற்றிய உண்மையான கணக்கு ஒன்றை 19...... ஆம் ஆண்டு ........... மாதம் ...... ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கோப்பிடுவீர் என்றும சத்தியஞ் செய்கின்றீர்/உறுதிப்படுத்துகின்றீர்.

இல. 89

(பிரிவு 535)

இறந்துபோனவர் மரணசாதனம் எழுதாதவராக இறந்தவிடத்து சத்தியக் கடதாசியின் படிவம்

(விதிமுறையான பாகங்கள் பகுதிகள் 75 ஆம் இலக்கப்படிவத்தில் உள்ளவாறு)

1. யான், இறந்துபோனவராகிய ........... என்ற இடத்தைச் சேர்ந்த ............... என்பவரின் (கைம்பெண், கிட்டிய உறவினர், முதலியோர்) ஆவேன். அத்துடன், சொல்லப்பட்ட ....... .......அவர்களே அவர்களுடைய வாழ்நாளின் போது தெரிந்திருந்தேன் என்பதோடு அவரோடு நல்ல பரிச்சயமுடையவராகவும் இருந்தேன்.

2. சொல்லப்பட்ட ..............என்பவர் 19...... ஆம் ஆண்டு ........... மாதம் ......ஆம் தேதியன்று ........... என்ற இடத்தில் மரணமானுர் என்பதோடு, அவர் மரணசாதனம் எதையும் எழுதிவைக்காமல் இறந்தார். அத்துடன் இதனுேடு இணைக்கப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்ட இயல்பும் பெறுமதியும் கொண்ட ஆதனத்தை ..............நீதிமன்றத்தின் நியாயாதிக்க எல்லைக்குள் விட்டு இறந்துள்ளார்.

(விதிமுறையான இறுதியுரை)

(அட்டவணை)

இல. 90

(பிரிவு 520)

தேவைப்படுத்தப்படும்போது நிறைவேற்றுநரால் அல்லது நிருவாகியால் கொடுக்கப்படவேண்டிய பிணைப்பொறுப்பு முறியின் படிவம்.

............................மாவட்ட நீதிமன்றத்தில்.

இத்தாற் சகலரும் அறிக: (நிறைவேற்றுநரும் அல்லது நிருவாகியும்) அத்துடன் பிணைக்காரர்களாகிய ....................என்பவரும் .................... என்பவரும் ஆகிய நாம்....................மாவட்ட நீதிமன்றத்தின் செயலாளரான ......... ...........என்பவருக்கு (அல்லது மாவட்ட நீதிமன்றத்தின் செயலாளராக அப்போதைக்கு இருப்பவருக்கு) சொல்லப்பட்ட ......................என்பவரை ரூபாய்த் தொகையிலும் சொல்லப்பட்ட ...................என்பவரையும் ......... ...........என்பவரையும் தலா ...........ரூபாத் தொகையிலும் உறுதியாகக் கட்டுப்படுத்தியும், பிணித்தும் கொள்கிறேம். இத்தொகை சொல்லப்பட்ட செயலாளருக்கு அல்லது அப்போதைக்குச் செயலாளராக இருப்பவருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்; இத்தொகை நன்ருகவும், உண்மையாகவும் செலுத்துவதற்கென நாமும் எங்களுள் ஒவ்வொருவரும் எங்களையும்; எங்களது மரபுரிமையாளர்கள், நிறைவேற்றுநர்கள், நிர்வாகிகள் ஆகியோரையும் இவ் ஆவணத்தின் மூலம் உறுதியாகப் பிணித்துக்கொள்கிறேம், என்பதோடு ..................... ஆகியவற்றைத் துறக்கிறேம் என்பதோடு ....................ஆகியவற்றை துறக்கவும் துறக்கிறேம்.

சொல்லப்பட்ட நீதிமன்றத்தால் 19...... ஆம் ஆண்டு........... மாதம்........... ஆம் தேதியன்று ஆக்கப்பட்ட கட்டளையின் மூலம், இறந்துபோனவராகிய ....................என்பவரின் ஆதனத்துக்கும் மரணச்சொத்துக்குமான மரணசாதன அதிகாரப்பத்திரம் அல்லது நிருவாகத் தத்துவப்பத்திரம் சொல்லப்பட்ட நிறைவேற்றுநருக்கு அல்லது நிருவாகிக்கு அவர் அதனை முறைப்படி நிறைவேற்றுவதற்கான அல்லது நிருவகிப்பதற்கான பிணைப்பொறுப்பைக் கொடுப்பதன் பேரில் வழங்கப்படுதல் வேண்டுமென்று கட்டளை இடப்பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன் சொல்லப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தானது மதிப்பீடு செய்யப்பட்டு ......... ரூபா பெறுமதி கொண்டதென மதிப்பிடப்பட்டுள்ளதாதலாலும்:

இப்போது இந்தக் கட்டுப்பாட்டின் நிபந்தனைகள் பின்வருமாறு. அதாவது மேலே தம்மைத் தாமே கட்டுப்படுத்தப் பிணித்துக் கொண்ட நிறைவேற்றுநர் அல்லது நிருவாகி சொல்லப்பட்ட இறந்துபோனவரது ஆதனமாகவும் மரணச் சொத்தாகவும் உரிமைகளாகவும் வருமதிகளாகவும் உள்ளனவும் சொல்லப்பட்ட ....................என்பவரது அல்லது அவரது சார்பில் வேறெவரேனுமாயினது உடைமைக்கு அல்லது அறிவுக்கு 19...... ஆம் ஆண்டு............ மாதம்...... ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் வந்துள்ளனவும் வரக்கூடியனவுமான யாவை பற்றியுமான உண்மையும் நிறைவும் கொண்ட ஓர் ஆதனப்பட்டியலை இந்த நீதிமன்றத்திடம் சமர்ப்பித்து அவற்றை நன்முகவும் உண்மையாகவும் நிருவாகஞ் செய்வாராயின், (அதாவது எப்படியெனில்) அவர் சொல்லப்பட்ட இறந்து போனவர் இறந்தநேரத்தில் அவர் செலுத்தவேண்டியனவாய் இருந்த எல்லாக் கடன்களையும் ஒவ்வொரு கடனையும் அவ்வவற்றில் முந்துரிமைக்கேற்ப கண்ணியமாகவும் நியாயமாகவும் கொடுத்துத் தீர்த்துவிட்டு அல்லது மரணச் சொத்தானது எல்லாக் கடன்களையும் முழுமையாகக் கொடுத்துத் தீர்ப்பதற்கு போதாதாகவிருப்பின் சமமான விகிதாசாரத்தில் கொடுத்துத் தீர்த்துவிட்டு, அதன்பின்னர் சொல்லப்பட்ட நிருவாகத் தத்துவப்பத்திரத்தோடிணைக்கப்பட்ட சொல்லப்பட்ட மரணசாதனத்தில் அடங்கியனவான மரணசாதனப் பொருட்களை சொல்லப்பட்ட ஆதனம் இடம்தருகின்றவரைக்கும் சட்டமானது அவரை கட்டுப்படுத்துகின்றவரைக்கும் கொடுத்துத்தீர்த்துவிட்டு, தமது சொல்லப்பட்ட நிருவாகம் பற்றிய உண்மையானதும், நியாயமானதுமான கணக்கொன்றை 19...... ஆம் ஆண்டு............ மாதம்......... ஆந் தேதியன்று அல்லது அதன் முன்னர் இந்த நீதிமன்றத்துக்கு சமர்ப்பித்துவிட்டு அதன் பின்னர், மேற் சொல்லப்பட்ட ஆதனம், மரணச்சொத்து, உரிமைகள், வருமதிகள் ஆகியவற்றில் எஞ்சியும், மிஞ்சியும் உள்ளவற்றை, அவற்றைப்பெற சட்டப்படி உரித்துடைய ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு ஒப்படைப்பாராயின், இந்தக் கட்டுப்பாடு வெற்றும் வறிதுமாகிப் பயன் எதுவும் அற்றுவிடும். இல்லாவிடில் இது தொடர்ந்தும் முழுவலுவில் இருக்கும்.

(கடப்பாட்டுக்காரர்கள் எழுதிக்கொடுப்போர் எல்லோராலும் தேதியிடப்பட்டு ஒப்பமிடப்பட்டது.)

இல. 91

(பிரிவு 543)

ஆதனக்காப்புப்பத்திரத்துக்கான படிவம்

.................... மாவட்ட நீதிமன்றம்.

.................... என்பவருக்கும் ........... என்பவருக்கும், ............... எனும் இடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற ..................... என்பவர் இந்த நீதிமன்றத் தின் நியாயாதிக்கத்துள் ஆதனத்தை விட்டு இறந்துள்ளார் என்று இந்த நீதி மன்றத்துக்கு உண்மையுறுதிப்படுத்தப்பட்டுள்ளதாதலால்: நீங்களும் உங்களுள் ஒவ்வொருவரும் சொல்லப்பட்ட எல்லா ஆதனத்தையும் அவை ஒவ்வொன்றை யும், அவற்றிலிருந்து வரக்கூடிய வாடகைகள், ஆதாயங்கள், இலாபங்கள் என் பனவற்றையும் எடுப்பதற்கும், சேகரிப்பதற்கும், அவற்றை கோரிப் பெறுவதற் கும் அவ்வாறு பெற்றவற்றை அவற்றைப் பெறுவதற்கு உரித்துடைய வரெனத் தோன்றும் ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு சட்டப்படி வழங்கப்படும் வரையும் அல்லது இது தொடர்பில் இந்த நீதிமன்றத்திலிருந்து நீர் மேற் கொண்டு கட்டளைகள் பெறும்வரைக்கும் உம்முடைய சேமமான பாதுகாவலில் வைத்திருப்பதற்கும் இத்தால் தத்துவமளிக்கப்பட்டு அதிகாரமளிப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
........................... செயலாளர்.

19...... ஆம் ஆண்டு ........... மாதம் ......ஆம் தேதி.

இல. 92

(பிரிவு 539 (1))

ஆதனப்பட்டியலை சரிபிழைபார்த்து பெறுமதி மதிப்பீடு செய்வதற்கான படிவம்

இறந்துபோன .................... என்பவரது மரணசாதனத்தின் நிறைவேற்றுநரான (அல்லது இறந்து போனவரது மரணசொத்தின் நிருவாகியான) ................... என்ற இடத்தில் உள்ள அ, ஆ ஆகிய நான் சத்தியம்செய்து (அல்லது பயபக்தியாகவும், நேர்மையாகவும், உண்மையாகவும் உறுதிப்படுத்தி வெளிப்படுத்தி) பின்வருமாறு சொல்கிறேன் :—

1. எனது அறிவுக்கும், தகவலுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை, மேலே எழுதப்பட்ட ஆதனப்பட்டியலானது முறையான கவனத்துடன் இதுவரை என்னால் நிதானிக்க, முடிந்தவரைக்கும், இறந்துபோனவராகிய சொல்லப்பட்ட ....................என்பவரின் அசைவுள்ளனவும், அசைவற்றனவுமான ஆதனங்கள், அவரது உரிமைகள், வருமதிகள் ஆகியன எல்லாம் பற்றிய உண்மையும், முழுமையும் நிறைவுங்கொண்ட சரியான கணக்கைக் கொண்டுள்ளது.

2. எல்லா ஆதனங்களிலும் மதிப்பீட்டையும் பெறுமதி மதிப்பீட்டையும் நான் கவனமாகச் செய்துள்ளேன் ; இவற்றின் விபரங்கள், சொல்லப்பட்ட ஆதனப்பட்டியலில் அடங்கியுள்ளன என்பதோடு வகுத்தும் காட்டப்பட்டுள்ளன ; அத்துடன் எனது துணிபுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை, சொல்லப்பட்ட ஆதனப்பட்டியலில் காட்டப்பட்டிருக்கும் பல்வேறு விடயதானங்களுக்கு நேரெதிரே முறையே காட்டப்பட்டிருக்கும் பல்வேறு தொகைகளுள் அவை எவ்விடயதானங்களுக்கு நேரெதிரே காட்டப்பட்டுள்ளனவோ அவ்விடயதானங்களின் தற்போதைய பெறுமதியை முழுமையாகவும் நீதியாகவும் பிரதிபலிக்கின்றன.

இல. 93

(பிரிவு 536)

தடையறிவிப்பொன்றுக்கான படிவம்

..................... மாவட்ட நீதிமன்றத்தில்

இறந்து போனவராகிய ...........என்ற இடத்தைச் சேர்ந்த ..................... என்பவரது மரண சொத்தையும், உடைமைப் பொருள்களையும் எவரும் எதுவும் செய்யாதிருக்கக்கடவீர். செல்லப்பட்ட இறந்துபோனவர், அவரில் அக்கறையுடைய கட்சிக்காரரின் பதிவுபெற்ற அற்றோணியான ................ அவர்களுக்கு (அல்லது விடயத்திற்கேற்ப அறிவுக்கெட்டாமல்) 19...... ஆம் ஆண்டு ........... மாதம் ......... ஆம் தேதி காலமானார்.

........................

(கட்சிக்காரரின் ஒப்பமிடப்பட்டு தேதியிடப்பட்டது.)

1988 ஆம் ஆண்டின் 79 ஆம் இலக்க சட்டத்தின் 18, 20, 25, முதல் 41 வரையிலான பிரிவுகளின் நீக்கம்.

8. 1988 ஆம் ஆண்டின் 79 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் அதன் 18, 20, 25 முதல் 41 (இரண்டும் உள்ளிட்ட) வரையிலான பிரிவுகள் நீக்கப்படுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

9. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.